පහත නිරීක්ෂණ කරනු ලැබේ.

(අ) වෙනත් ආයතන සතු වාහන 17 ක් නිසි පරිදි පවරා ගැනීමකින් තොරව අග්‍රාමාත්‍ය කාර්යාලය භාවිතා කරනු ලැබේ. එම වාහන අතරින් මාර්ග සංවර්ධන අධිකාරියෙන් අග්‍රාමාත්‍ය කාර්යාලයේ භාවිතයට ගෙන ඇති වාහනයක් 2022 ජනවාරි 14 වන දින අනතුරකට ලක්වී ඒ සඳහා වූ රු.46,600 ක අලාභහානිය සඳහා අදාල රක්ෂණ වන්දිය ශ්‍රී ලංකා රක්ෂණ ආයතනයෙන් ලබාගත් බවට විගණනයට තහවුරු නොවීය.

(ආ) අග්‍රාමාත්‍ය කාර්යාලය සතු වාහන 6 ක් අනෙකුත් අමාත්‍යාංශ, දෙපාර්තමේන්තු හා කාර්යාල වෙත තාවකාලිකව ලබා දී තිබුණත් මෙම වාහන නැවත අග්‍රාමාත්‍ය

කාර්යාලයට පවරා දිය යුතු නිශ්චිත දිනයක් එහි සඳහන් වී නොතිබුණ අතර 2023 අප්‍රේල් 30 විගණිත දිනය වන විටත් මෙම වාහන පවරා දුන් කාර්යාලය විසින් භාවිතා කරමින් පැවතුණි.

(ඇ) අග්‍රාමාත්‍යවරයාගේ ආරක්ෂිත රථ පෙළට ඇතුළත් බෙන්ස් කාර් 3 ක් 2023 අප්‍රේල් දක්වා ලියාපදිංචි කර නොතිබුණ අතර ඒවායින් එක රථයක් රක්ෂණය කර නොතිබුණි.

(ඈ) වෙනත් ආයතන වලට වාහන මුදා හැරීම සම්බන්ධයෙන් විගණනයට ඉදිරිපත් වූ තොරතුරු අනුව ජනාධිපති කාර්යාලයෙන් වාහන 03 ක් අග්‍රාමාත්‍ය කාර්යාලයට ලබා දී ඇති බව දන්වා තිබුණ ද අග්‍රාමාත්‍ය කාර්යාලයේ වාර්තා අනුව ජනාධිපති කාර්යාලයෙන් වාහන 04 ක් ලැබී තිබුණ බවත් වාහන අංක ද එකිනෙකට නොසැසඳෙන බවත් නිරීක්ෂණය විය.

(ඉ) විගණනයට ඉදිරිපත් වූ තොරතුරු අනුව, අග්‍රාමාත්‍ය කාර්යාලයෙන් ජනාධිපති කාර්යාලයට වාහන 04 ක් මුදා හැර ඇති බව අග්‍රාමාත්‍ය කාර්යාලය වාර්තා කළ ද එවැනි වාහන 04 ක් අග්‍රාමාත්‍ය කාර්යාලයෙන් සපයා නොමැති බව ජනාධිපති කාර්යාලය වාර්තා කර තිබුණි.

3.3 පාඩු හා හානි

පහත කරුණු නිරීක්ෂණය කරනු ලැබේ.

(අ) 2022 ජනවාරි 19 වන දින සිදුවූ වාහන අනතුරකට අදාල රු.1,583,245 ක හානිය වෙනුවෙන් රක්ෂණ සමාගමෙන් රු.1,557,045 ක මුදලක් ලබා දී තිබුණ අතර ඉතිරි රු.26,200 ක හානියක් හානි පාඩු ලේඛනයේ අනාවරණය කර නොතිබුණි. එම අලාභය පොත් වලින් ඉවත් කිරීමට හෝ වගකිව යුතු පාර්ශවයෙන් අය කර ගත් බවට විගණනයට තහවුරු නොවීය.

(ආ) වෙඩි නොවදින රථයකට 2022 ජූලි 09 දින රටේ ඇති වූ කළබලකාරී තත්ත්වය හේතුවෙන් සිදුව ඇති හානිය විගණිත දිනය වූ 2023 මාර්තු 29 දිනය දක්වා ගණන් බලා නොතිබුණි. රු.මිලියන 263 ක රක්ෂණ ආවරණයෙන් රු.මිලියන 200 ක මුදලක් පමණක් ආවරණය කර ගැනීමට ශ්‍රී ලංකා ඉන්ෂුවරන්ස් සමාගමෙන් අනුමත කර තිබුණි. අලුත්වැඩියාවට අවශ්‍ය අමතර කොටස් රට තුළ නොමැති වීම නිසා මාස 09 කට ආසන්න කාලයක් එම රථය ගර්හිත තත්ත්වයේම පවතී.

(ඇ) තවත් රථයකට 2022 මැයි 10 දින රු.874,586 ක අලාභහානියක් සිදුව ඇති අතර එම අලාභහානිය සම්පූර්ණයෙන් රක්ෂණ ආයතනය විසින් ආවරණය කළ බවට ලිඛිත සාක්ෂි ගොනුවේ ඇතුළත් කර නොතිබුණි. මෙම රථය අළුත්වැඩියාවට අවශ්‍ය අමතර කොටස් මිලදී ගැනීමට අදාල බිල්පත් පිළිගත නොහැකි බවට රක්ෂණ සමාගම දැනුම් දී තිබුණි. ඒ අනුව මෙම රථයට සිදුවූ මුළු අලාභය සහ රක්ෂණ සමාගමෙන් ආවරණය කර තිබූ හානියේ ප්‍රමාණය විගණනයේදී අනාවරණය කර ගත නොහැකි විය.

(ඈ) 2022 මැයි 24 දින හා 2022 මැයි 31 වන දින සිදුවූ රථ වාහන 2 කට අදාල අනතුරු, හානි පාඩු ලේඛනයේ දක්වා තිබුණත් දෙපාර්තමේන්තු ලිපිගොනු අංක PMO/ADM/02/03/2101 ගොනුවට අනුව මෙම අනතුරු පිළිබඳව විධිමත් පරීක්ෂණයක් සිදු කළ බවට විගණනයට තහවුරු කරගත නොහැකි විය.

(ඉ) 2022 දෙසැම්බර් 01 දින අනතුරකට ලක්වී රථයකට අදාල ව රු.129,100 ක හානියක් සිදුවී තිබුණි. එම මුදල රක්ෂණ සමාගමෙන් ආවරණය වී ඇති බවට අලාභහානි ලේඛනයේ සඳහන් වුවද විගණනයේදී තොරතුරු තහවුරු කර ගත නොහැකි විය.

(ඊ) අලාභහානි වටිනාකම එකතුව රු.203,181,631 ක් වූ 2022 වර්ෂයේ සිදුවී ඇති වාහන අනතුරු 08 ක් සම්බන්ධයෙන් මු.රෙ.104(1) ප්‍රකාරව අලාභය සිදු වූ දිනයේ සිට තුන් මසක් ඇතුළත පූර්ණ වාර්තාවක් ඉදිරිපත් කළ යුතු වුවත් 2023 අප්‍රේල් 17 විගණිත දිනය වන විටත් එම වාර්තා ඉදිරිපත් කර නොතිබුණි.

3.4 2022 වර්ෂයේ රට තුළ පැවති කළබලකාරී තත්ත්වයන් මත සිදුවූ අලාභහානි

2022 වර්ෂයේ අවස්ථා ගණනක දී ඇතිවූ කළබලකාරී තත්වයන් මත අග්‍රාමාත්‍ය කාර්යාලයට හානි සිදුවී තිබුණු අතර ඊට අදාල විගණනයට ඉදිරිපත් වූ තොරතුරු වලට අදාල ව පහත කරුණු නිරීක්ෂණය කරනු ලැබේ.

(අ) කළබල හේතුවෙන් අග්‍රාමාත්‍ය කාර්යාලයට සිදු වී ඇති මුළු හානිය රු.111,043,124 ක් බව 2023 අප්‍රේල් 21 දිනැති අංක PMO/FIN/01/13/01/01/2023 දරන ලිපිය මඟින් අග්‍රාමාත්‍ය කාර්යාලය විසින් විගණනයට වාර්තා කර තිබුණි. මෙම හානි සම්බන්ධයෙන් මු.රෙ. 103 - මු.රෙ.104 පරිදි කටයුතු කිරීම පිළිබඳ තොරතුරු 2023 අප්‍රේල් 28 විගණිත දිනය වන විටත් විගණනයට ඉදිරිපත් කර නොතිබුණ අතර මෙම හඳුනාගත් අලාභ හානි මූල්‍ය ප්‍රකාශන වල අනාවරණය කර නොතිබුණි.

(ආ) 2022 වර්ෂයේ භාණ්ඩ සමීක්ෂණ වාර්තා අනුව භාණ්ඩාගාර 66 ආකෘතිය හා කළබල හේතුවෙන් අලාභහානි සිදුවූ බවට හඳුනාගත් බඩු ලැයිස්තුව අතර භාණ්ඩ වර්ග 13 ක වෙනස්කම් පැවතුණ අතර 2022 භාණ්ඩ සමීක්ෂණ වාර්තාවට අනුව කළබල හේතුවෙන් හානි වූ භාණ්ඩ ලෙස හඳුනාගත් භාණ්ඩ වර්ග 27 ක් කළබල හේතුවෙන් හානි වූ භාණ්ඩ පිළිබඳ අග්‍රාමාත්‍ය කාර්යාලයෙන් සපයන ලද වාර්තාවේ ඇතුළත් වී නොතිබුණ බව නිරීක්ෂණය විය.

(ඇ) කළබලකාරී තත්ත්වය හේතුවෙන් භාණ්ඩ වර්ග 20 ක් අස්ථානගත වී ඇති බවට අග්‍රාමාත්‍ය කාර්යාලය ඉදිරිපත් කළ වාර්තාවේ සඳහන් වුවත් 2022 වර්ෂය සඳහා සිදු කරන ලද භාණ්ඩ සමීක්ෂණයේදී ඒ බව හඳුනාගෙන නොතිබුණි.

(ඈ) අග්‍රාමාත්‍ය කාර්යාලය ලබා දුන් වාර්තාව අනුව 2022 මැයි 09 වන දින අරලියගහ මන්දිරය හා මහජන සම්බන්ධතා අංශයේ සිදු වූ මුළු අලාභය ලෙස රු.8,342,688.60 ක් ලෙස දක්වා ඇතත් ඒ සමඟ ලබාදී ඇති ඇමුණුම් වල තොරතුරු අනුව එය රු.8,437,438.60 ක් විය. ඒ අනුව රු.94,750.00 ක වෙනසක් නිරීක්ෂණය විය.

4 **කළමනාකරණ දුර්වලතා**

(අ) 2022 අප්‍රේල් 26 දිනැති අංක 03/2022 දරන ජාතික අයවැය චක්‍රලේඛ ප්‍රකාරව රාජ්‍ය වියදම් ඉතා අත්‍යාවශ්‍ය සේවාවන්ට පමණක් යොදාගත යුතු බවත්, ගොඩනැගිලි ඉදිකිරීම් හා කුලියට ගැනීම නැවැත්වීම දැඩිව අනුගමනය කළ යුතු බවත්, සඳහන් කර තිබියදීත් අග්‍රාමාත්‍ය කාර්යාල නිල නිවසේ නඩත්තු හා අළුත්වැඩියා සඳහා 2022 වර්ෂයේ දී රු.මිලියන 182 ක් වැය කර තිබුණු අතර 2021 වර්ෂයේ දී ද රු.මිලියන 58 ක් වැය කර තිබුණු බව තවදුරටත් නිරීක්ෂණය විය.

(ආ) 2022 අප්‍රේල් 26 වන දිනැති රාජ්‍ය අයවැය චක්‍රලේඛ අංක 03/2022 හා එහි xiv පරිච්ඡේදයට අනුව රජයේ වියදම් සීමා කර තිබියදීත් රු.569,344 ක වියදමක් දරමින් අග්‍රාමාත්‍යතුමාගේ පාර්ලිමේන්තු ප්‍රකාශ ඇතුළත් කෘතියේ පළමු වෙළුම මුද්‍රණය කර තිබුණි. එහි පිටපත් 197 ක් 2023 අප්‍රේල් 21 දක්වා බෙදාහැර නොතිබුණි.

5 **මානව සම්පත් කළමනාකරණය**

දෙපාර්තමේන්තුවේ අනුමත තනතුරු සංඛ්‍යාව 561 ක් වූ අතර ඉන් තනතුරු 286 ක් පුරප්පාඩුව පැවතුනි. එම පුරප්පාඩු වලින් 30 ක් ජ්‍යෙෂ්ඨ මට්ටමේ තනතුරු විය.

බී.ඕ.ඩී. ප්‍රනාන්දු
ජ්‍යෙෂ්ඨ සහකාර විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

செயற்திறன் அறிக்கை

2022

பிரதம அமைச்சர் அலுவலகம்

தொலைபேசி : 011-2575317
பெக்ஸ் : 011-2575310
மின்னஞ்சல் முகவரி : info@pmoffice.gov.lk
இணையத்தளம் : www.pmoffice.gov.lk
முகவரி : 58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, கொழும்பு 07

உள்ளடக்கம்

பக்க இலக்கம்

1. நிறுவனம் தொடர்பான விபரம் 1

1.1. அறிமுகம் 1

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணி 2

1.3. முன்னுரிமைகள் 2

1.4. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிறுவனக் கட்டமைப்பு 4

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு 5

2.1 கொள்கைகளை வகுத்தல் 5

2.2. அபிவிருத்தி அலுவல்களுக்கான பங்களிப்பு 7

2.3. பல்வேறு அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களினால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கான தலையீடுகள் 14

2.4. காலத்தின் தேசிய தேவைப்பாடுகளுக்கான பங்களிப்பு 18

2.5. திட்டமிடல் மற்றும் அறிக்கையிடல் 24

2.6. பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள் 25

2.7. சட்ட அலுவல்கள் 29

2.8. தாபன மற்றும் பணியாட்தொகுதி அலுவல்கள் 31

2.9. டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் 33

2.10. கணக்காய்வு, முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் 35

2.11. இராஜதந்திர மற்றும் சர்வதேச அலுவல்கள் 38

2.12. பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல் 42

2.13. ஊடகம் மற்றும் தொடர்பாடல் 45

2.14. சமய அலுவல்களுக்கான பங்களிப்பு 47

பக்க இலக்கம்

3. ஆண்டின் நிதிச் செயற்திறன் **52**

3.1. நிதிச் செயற்திறன் கூற்று 52

3.2. நிதி நிலைமை தொடர்பான கூற்று 53

3.3. நிதிப் பாய்ச்சல் கூற்று 54

4. நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் **55**

4.1. நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்திற்கு ஏற்ப) 55

5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன் **64**

5.1. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன் குறிகாட்டிகள் 64

5.2. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் 70

6. மனித வளங்கள் தொடர்பான குறிப்பு **75**

6.1 பதவியணி முகாமைத்துவம் 75

6.2. மேலதிக பணியாட்தொகுதி அல்லது பணியாட்தொகுதிப் பற்றாக்குறை நிறுவனத்தின் செயற்திறனில் தாக்கம் செலுத்தும் விதம் 75

6.3. மனித வளங்கள் அபிவிருத்தி 76

7. இணக்கப்பாட்டு அறிக்கை 79

7.1. இணக்கப்பாட்டு அறிக்கை 79

8. கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானங்கள **91**

8.1. கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானங்கள 91

1.0 நிறுவனம் தொடர்பான விபரம்

1.1 அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ கடமை அலுவல்களைச் செயற்படுத்துகின்ற பிரதம அமைச்சர் அலுவலகம், அரச கொள்கைகளுக்கு ஏற்ப பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான வழிகாட்டல், ஒருங்கிணைப்பு மற்றும் தலைமைத்துவத்தினை வழங்குகிறது.

அத்துடன், காலத்தின் சவால்களுக்கு மத்தியில், அச்சமின்றி, திடசங்கற்பத்துடன் அந்த சவால்களுக்குத் துரிதமான தீர்வுகளை வழங்குவதற்கும், மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும் கடினமாக காலப்பகுதிகளில் அவர்களின் பக்கம் நின்று குறித்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான தலைமைத்துவத்தைப் பிரதம அமைச்சர் அலுவலகம் வழங்குகிறது. மேலும், நாட்டின் அபிவிருத்திப் பணியை அடைந்துகொள்வதற்கு அவசியமான கொள்கைகளை வகுத்தல் மற்றும் மக்களை மையப்படுத்திய அணுகுமுறையொன்று ஊடாக நிலைபேறான முறையில் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பங்களிப்பு, வழிகாட்டல், சிறப்பான ஒருங்கிணைப்பினை வழங்குதல் மற்றும் உலகளாவிய அந்நியோன்யத் தொடர்புகளை விரிவுபடுத்தும் நோக்குடன் இராஜதந்திர அலுவல்கள் சம்பந்தமான பங்களிப்புக்களை வழங்குவதும் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் நிதமும் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 15 ஆவது கௌரவ பிரதம அமைச்சராக தினேஷ் குணவர்தன அவர்கள் செயலாற்றுகிறார். மேலும், 2022 ஆம் ஆண்டில் மூன்று பேர் (03) பிரதம அமைச்சர் பதவியில் செயலாற்றினார்கள்.

- கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் - 2020.08.09 – 2022.05.09
- கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் - 2022.05.12 – 2022.07.20
- கௌரவ பிரதம அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்கள் - 2022.07.22 முதல்

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணி

❖ **நிறுவனத்தின் தூரநோக்கு**

- "சுயாதீன, இறைமையுள்ள மற்றும் சௌபாக்கியமிக்கதோர் இலங்கை"

❖ **நிறுவனத்தின் செயற்பணி**

- "இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச பொறிமுறையொன்றுக்கான தலைமைத்துவத்தை வழங்குதல்"

1.3. முன்னுரிமைகள்

- அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்
- பிரதம அமைச்சர் தலைமை தாங்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- பிரதம அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் வினவப்படும் வினாக்களுக்குப் பதில்களை தயாரித்தல்
- பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்களுக்கு ஏற்புடைய அலுவல்களை ஒருங்கிணைத்தல்
- பிரதம அமைச்சரின் செயலாளர் தலைமைத்துவம் வகிக்கின்ற பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னேற்றத்தினைத் தொடராய்வு செய்தல்
- பிரதம அமைச்சரின் செயலாளர் பிரதிநிதித்துவம் செய்கின்ற பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னேற்றத்தினைத் தொடராய்வு செய்தல்

- சுபீட்சத்தின் நோக்கு கொள்கைகளை அடைந்துகொள்வதற்காக பல்வேறுபட்ட அரச நிறுவனங்கள் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு, வழிகாட்டல், கண்காணிப்பு மற்றும் தொடராய்வு
- பிரதம அமைச்சர் அவர்களுக்கு இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணிச் செல்வதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்
- பிரதம அமைச்சரின் வெளிநாட்டு விஜயங்களுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல்.
- தேசிய மற்றும் சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணை சேவைகளை அரச அனுசரணையுடன் ஏற்பாடு செய்தல்.
- பிரதம அமைச்சரிடம் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளை உரிய நிறுவனங்களிடம் முன்வைத்து நிவாரணத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- பிரதம அமைச்சர் அலுவலகம், அலரி மாளிகை, பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றை உரிய முறையில் பராமரித்துப் பேணி வரல்
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அன்றாட நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பிரதம அமைச்சர் கலந்துகொள்ளும் அரச மற்றும் தேசிய வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின்போது ஊடக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

1.4 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிறுவனக் கட்டமைப்பு



2.0 முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 கொள்கைகளை வகுத்தல்

பொருளாதார, சமூக மற்றும் அரசியல் துறைகளில் காலத்தின் சவால்களுக்கு ஏற்புடையவாறு கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் அல்லது பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்படும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், சந்திப்புக்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அந்த சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களைத் தொடராய்வு செய்வதற்கு அவசியமான வசதிகளை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல், பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு ஏற்புடையவாறு வெளிநாட்டு அரசுகள் மற்றும் நிறுவனங்களுடன் கௌரவ பிரதம அமைச்சர் சார்பிலான ஒருங்கிணைப்பு அலுவல்களும், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதும் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்வேறு வெளிநாட்டு அரசுகள் மற்றும் நிறுவனங்களுடன் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் உள்நாட்டு அபிவிருத்தி மூலோபாயத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்களைச் செய்தல், நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக் குழுக்களை (Think Tank) உருவாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல், வருமான மற்றும் அந்நியச் செலாவணி உருவாக்கல் முன்மொழிவுகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து முக்கியமான இலக்குகள் தொடர்பாக விசேட செயலாற்றுகைக் குழுக்களை நிறுவுதல் மற்றும் ஒருங்கிணைப்பினைச் செய்தல் என்பனவும் இந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் இராஜதந்திரரீதியாக முன்வைக்கப்படுகின்ற கடிதங்கள், விஞ்ஞாபனங்கள், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் தொடராய்வு செய்தல் என்பன மேற்கொள்ளப்படுவதுடன், கௌரவ பிரதம அமைச்சருக்குத் தனிப்பட்டரீதியில் கிடைக்கும் கடிதங்கள் மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளருக்குக் கிடைக்கின்ற விசேட கவனத்தை ஈர்க்க வேண்டிய கடிதங்கள் தொடர்பான அலுவல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி விடயத் துறைக்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளப்பட்ட அலுவல்கள்

- வலுசக்தித் துறையினை அபிவிருத்தி செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் இலக்குகளை விதந்துரைப்பதற்கான அமைச்சரவை உபகுழுவின் ஒருங்கிணைப்பு அலுவல்கள்

- எரிவாயு வழங்கலைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்வது தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் ஒருங்கிணைப்பு அலுவல்கள்

- பல்வேறு அபிவிருத்தி மூலோபாயத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்கள்

- பாரிளயவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களை மீள முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்துவதற்காக (RAMP) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு ஏற்புடைய அலுவல்கள்

- உள்நாட்டு, வெளிநாட்டு வருமான உருவாக்கல் முன்மொழிவுகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

- முக்கியமான இலக்குகள் தொடர்பாக விசேட செயலாற்றுகைக் குழுக்களை நிறுவுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- ஏனைய அமைச்சரவை உபகுழுக்களுக்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்கள்

- உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு தொடர்பான தொழிநுட்ப ஆலோசனைக் குழுவை ஒருங்கிணைத்தல்.

- உணவுப் பாதுகாப்பு துரித தேசிய நடவடிக்கை – கடற்றொழில் மற்றும் கால்நடை வளங்கள் தேசிய குழுவுக்கு ஏற்புடைய அலுவல்கள்

- வாழ்வாதார மற்றும் விசேட பொருளாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வழிகாட்டல் மற்றும் வசதிகளை வழங்குதல்

- பல்வேறு விடயத் துறைகளில் ஈடுபடுகின்ற தொழில்சார்ந்தோரின் தொழில் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு தலையீடு செய்தல்

- சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான அலுவல்கள்

- அரச நியதிச்சட்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் போன்றவற்றுக்கான நியமனங்களுக்கு ஏற்புடைய விதந்துரைகளை வழங்குவதற்காக அமைச்சரவையின் நியமிக்கப்பட்ட குழுவுக்கு ஏற்புடைய அலுவல்கள்

2.2 அபிவிருத்தி அலுவல்களுக்கான பங்களிப்பு

தேசிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்ப அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடையும் வகையில் பொதுமக்களுக்குத் துரிதமாக அவற்றின் நன்மைகள் கிடைப்பதற்காக வழிநடாத்துவதற்கென கௌரவ பிரதம அமைச்சர் அல்லது பிரதம அமைச்சரின் செயலாளரின் வழிகாட்டல் மற்றும் தலைமையின் கீழ் 2022 ஆம் ஆண்டினுள் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

- பிரதம அமைச்சர்/ பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறன்மிக்கவையாக மாற்றியமைப்பதற்கான கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்

- கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் சார்ந்த தொடராய்வுகளைச் செய்தல்.

- கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்குத் தேவையான முறையில் பின்னணி மற்றும் சாத்தியவள ஆய்வுகளைச் செய்தல்.

- பல்வேறு தரப்பினரிடமிருந்து பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு முன்வைக்கப்படுகின்ற கடிதங்கள் சார்ந்த அலுவல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள்.

- பிரதம அமைச்சர் அவர்கள் பதவி வழியில் தலைமைத்துவம் வகிக்கின்ற கட்டுப்பாட்டுச் சபைகளின் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு அலுவல்கள்

- பிரதம அமைச்சர் அலுவலகம் களரீதியாக மற்றும் பல்வேறு அமைச்சுக்கள் ஊடாக நடாத்துகின்ற மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகள் சார்ந்த ஒருங்கிணைப்பு மற்றும் ஏற்பாட்டு அலுவல்கள்.

- அமைச்சுக்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் கருத்திடங்களில் மூன்றாவது தரப்பாக தேவையான வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பினைச் செய்தல்.

அதற்கேற்ப, கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் நடாத்தப்படுகின்ற கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அந்தக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடையவாறு கலந்துரையாடல் குறிப்புக்களைப் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல் மற்றும் அது பற்றிய தொடராய்வு அலுவல்களும் மேற்கொள்ளப்பட்டன.

கௌரவ பிரதம அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பல்வேறு துறைகளுக்கு ஏற்புடையவாறு நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்

(2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரை)

#	கூட்டம்	இடம்பெற்ற திகதி	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்/ தொடராய்வு செய்த விடயங்கள்
1.	அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2022.01.04	05
2.	உலக மரபுரிமை சீகிரியா புதிய நகரினை முறையாக மீள் கட்டமைப்பது தொடர்பான கலந்துரையாடல்	2022.01.11	07
3.	மத்திய கலாசார நிதியத்தின் பதவிகள் சார்ந்து ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.01.12	01
4.	உலக மரபுரிமை சீகிரியா புதிய நகரினை முறையாக மீள் கட்டமைப்பது தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடைய முன்னேற்றத்தை ஆராயும் கலந்துரையாடல்	2022.01.27	14
5.	இளைஞர் யுவதிகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல்	2022.01.31	12
6.	அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2022.02.14	07
7.	நகர அபிவிருத்தி மற்றும் கொழும்பு நகர மீளுருவாக்க நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்	2022.02.23	09
8.	கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுடன் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல்	2022.03.08	-
9.	அங்கவீனம் தொடர்பான தேசிய செயல்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்	2022.03.09	10
10.	அகில இலங்கை தெலுங்குக் கலைஞர்களின் கலாசார சங்கத்துடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2022.03.11	11
11.	மிகிந்தலை வர்த்தக நகரக் கருத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்	2022.03.24	08
12.	பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்	2022.03.25	-

#	கூட்டம்	இடம்பெற்ற திகதி	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்/ தொடராய்வு செய்த விடயங்கள்
13.	ஸ்ரீ சாலவன போதி மகா விகாரையின் புதிய தாதுக் கோபுரம் கொண்ட சீமா மாலக்கயவை சம்புத்த சாசனத்திற்கு பூஜை செய்யும் வைபவம் தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடல்	2022.03.29	07
14.	தற்போதைய பொருளாதாரச் சிக்கல்கள் தொடர்பான புத்திஜீவிகள் கலந்துரையாடல்	2022.03.29	-
15.	உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இந்நாட்டுத் தரப்பினருடன் நடாத்தப்பட்ட இரண்டாவது கலந்துரையாடல்	2022.04.26	04
16.	நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பான விசேட கலந்துரையாடல்	2022.05.14	03
17.	இலங்கை உணவு இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.05.14	02
18.	அத்தியாவசிய சேவைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்	2022.05.15	05
19.	அத்தியாவசிய சேவைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்	2022.05.16	11
20.	அத்தியாவசிய சேவைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்	2022.05.17	04
21.	கமத்தொழில், உரம் மற்றும் பெருந்தோட்டத் துறையின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.05.17	05
22.	கமத்தொழில், உரம் மற்றும் பெருந்தோட்டத் துறையின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.05.18	03
23.	உணவுப் பாதுகாப்பு, கமத்தொழில், உரம் மற்றும் பெருந்தோட்டத் துறையின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.05.23	13
24.	பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வரவுசெலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்	2022.05.23	06
25.	இந்திய கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்	2022.05.23	04
26.	வங்கியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்	2022.05.26	04
27.	பயிர்ச்செய்கை மற்றும் கமத்தொழில் ஊக்குவிப்புக் குழுக் கலந்துரையாடல்	2022.05.27	16
28.	கமத்தொழில் துறையின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.05.27	04

#	கூட்டம்	இடம்பெற்ற திகதி	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்/ தொடராய்வு செய்த விடயங்கள்
29.	நகரக் கமத்தொழில் அலுவல்கள் ஊக்குவிப்பு உப குழுவின் கலந்துரையாடல்	2022.05.27	06
30.	நிதியமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்	2022.05.30	11
31.	எரிபொருள் வழங்கலுக்காக போதுமான அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல்	2022.05.31	09
32.	இணைந்த வணிக சபையுடனான கலந்துரையாடல்	2022.06.02	-
33.	எரிவாயு நெருக்கடிக்கான தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடல்	2022.06.05	02
34.	பொருளாதார நிலைமை சார்ந்து துரிதமாக மேற்கொள்ள வேண்டிய தீர்வு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்	2022.06.05	01
35.	எரிபொருள் நெருக்கடிக்கான தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடல்	2022.06.05	01
36.	கமத்தொழில் துறையின் தற்கால சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.06.06	12
37.	இந்தியக் கடன் வசதி தொடர்பாக ஏற்புடைய அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2022.06.06	03
38.	இந்தியக் கடன் வசதி தொடர்பாக ஏற்புடைய அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2022.06.08	03
39.	நிர்மாணக் கைத்தொழிலில் நிலவும் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.06.14	01
40.	சுற்றுலாக் கைத்தொழில் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.06.14	-
41.	இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல்	2022.06.14	01
42.	அரிசி ஆலை உரிமையாளர்களின் கடன் சிக்கல் சம்பந்தமான கலந்துரையாடல்	2022.06.15	06
43.	இந்தியக் கடன் வசதி தொடர்பாக ஏற்புடைய அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட தொடராய்வுக் கலந்துரையாடல்	2022.06.15	03
44.	இந்தியக் கடன் வசதி தொடர்பாக ஏற்புடைய அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட தொடராய்வுக் கலந்துரையாடல்	2022.06.16	06

#	கூட்டம்	இடம்பெற்ற திகதி	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்/ தொடராய்வு செய்த விடயங்கள்
45.	உணவுப் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்	2022.06.17	28
46.	இலங்கை விமானக் கம்பனியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்	2022.06.17	-
47.	எரிபொருள் மற்றும் எரிவாயுக் குழுவின் மீளாய்வுக் கூட்டம்	2022.06.18	05
48.	பொருளாதார ஒத்துழைப்புக்கான செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்	2022.06.23	07
49.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்	2022.06.23	-
50.	பால் சார்ந்த உற்பத்தியாளர்களின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.06.27	12
51.	உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் அதிகாரிகளுடனான கலந்துரையாடல்	2022.06.27	9
52.	உணவுப் பாதுகாப்பு தொடர்பாக மாவட்டச் செயலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்	2022.06.29	4
53.	வங்கி மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கங்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்	2022.07.04	-
54.	ஆடைக் கைத்தொழில் தொடர்பான கலந்துரையாடல்	2022.07.05	-
55.	வங்கியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்	2022.07.06	02
56.	கடற்றொழில் துறையின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.07.08	10
57.	வலுசக்தித் துறையினை அபிவிருத்தி செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் இலக்குகளை விதந்துரைப்பதற்கான அமைச்சரவை உபகுழுக் கலந்துரையாடல் - I	2022.09.13	01
58.	நெல் கொள்வனவு சம்பந்தமாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.09.21	04
59.	தொடர்ச்சியாக எரிவாயு வழங்கலைப் பேணிச் செல்வது தொடர்பான அமைச்சரவை உபகுழுக் கூட்டம்	2022.09.23	04
60.	வலுசக்தி நெருக்கடியின் மத்தியில் மாற்று வலுசக்திகளைப் பயன்படுத்தி பொதுப்	2022.10.04	03

#	கூட்டம்	இடம்பெற்ற திகதி	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்/ தொடராய்வு செய்த விடயங்கள்
	போக்குவரத்து சேவையினைப் பலப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்		
61.	வலுசக்தித் துறையினை அபிவிருத்தி செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் இலக்குகளை விதந்துரைப்பதற்கான அமைச்சரவை உபகுழு	2022.10.19	-
62.	வலுசக்தித் துறையினை அபிவிருத்தி செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் இலக்குகளை விதந்துரைப்பதற்கான அமைச்சரவை உபகுழுக் கலந்துரையாடல் II	2022.11.03	11
63.	களனி, முதுன்எலவில் அமைந்துள்ள இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணித் துண்டொன்றில் விஷ்ணு தேவாலயமொன்றை நிர்மாணிப்பது தொடர்பாக நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2022.11.24	01
64.	விசேட தேவையுடைய சமூகத்தினருக்கு வசதிகளை வழங்குவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்	2022.12.22	14

2.3 பல்வேறு அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களினால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கான தலையீடுகள்

கௌரவ பிரதம அமைச்சருக்குப் பல்வேறு அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் நபர்களினால் கூட்டங்கள் அல்லது கலந்துரையாடல்களுக்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளின் தேவைப்பாட்டினை இனங்காண வேண்டிய சந்தர்ப்பங்களில் சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ளுதல், அதற்கேற்ப பிரதம அமைச்சரின்/ பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் கூட்டங்கள் அல்லது கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் மற்றும் கூட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், பிரதம அமைச்சர்/ பிரதம அமைச்சரின் செயலாளருக்கு விசேட கவனத்தை ஈர்த்து அரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல்வாதிகளினால் முன்வைக்கப்படும் கடிதங்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கேற்ப, பின்வருமாறு தலையீடுகள் செய்யப்பட்டுள்ளன.

- ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் அல்லது கலந்துரையாடல்கள் - 95
- மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வுகள் (Feasibility Study) - 19
- ஒட்டுமொத்தமாக தலையீடு செய்த கோரிக்கைகள் - 2552

அரச நியதிச்சட்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் போன்றவற்றுக்கு நியமிப்பதற்கு பிரதம அமைச்சரினால் மேற்கொள்ளப்படுகின்ற விதந்துரைகளை

ஜனாதிபதி அலுவலகத்திற்கு முன்வைத்தல், பிரதம அமைச்சர்/ பிரதம அமைச்சரின் செயலாளரை சந்திப்பதற்கு வருகை தருகின்ற விசேட நபர்களை சந்தித்தல், அவர்களுடன் கலந்துரையாடி ஏற்புடைய கோரிக்கைகள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2022.08.26 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரை கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டங்கள்

#	கூட்டம்	நடாத்தப்பட்ட திகதி
1.	மத்திய கலாசார நிதியத்தின் பிரதிநிதிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2022.08.26
2.	உணவுப் பாதுகாப்பினைத் துரிதப்படுத்தும் தேசிய நடவடிக்கை (கடற்றொழில் மற்றும் கால்நடை வளங்கள் தேசிய குழு)	2022.08.29
3.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் (RAMP –I)	2022.09.13
4.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் (RAMP –II)	2022.09.21
5.	நெல் கொள்வனவு சம்பந்தமாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்	2022.09.21
6.	தொடர்ச்சியாக எரிவாயு வழங்கலைப் பேணிச் செல்வது தொடர்பான அமைச்சரவை உபகுழுக் கலந்துரையாடல்	2022.09.23
7.	உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணை தொடர்பான தொழிநுட்ப ஆலோசனைக் குழு - I	2022.09.26
8.	துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் சம்பந்தமான கலந்துரையாடல்	2022.10.03
9.	தொடர்ச்சியாக எரிவாயு வழங்கலைப் பேணிச் செல்வது தொடர்பான அமைச்சரவை உபகுழு	2022.10.04

#	கூட்டம்	நடாத்தப்பட்ட திகதி
10.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் - III	2022.10.04
11.	தொடர்ச்சியாக எரிவாயு வழங்கலைப் பேணிச் செல்வது தொடர்பான அமைச்சரவை உபகுழு	2022.10.05
12.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் IV	2022.10.06
13.	தொடர்ச்சியாக எரிவாயு வழங்கலைப் பேணிச் செல்வது தொடர்பான அமைச்சரவை உபகுழு	2022.10.06
14.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் V	2022.10.12
15.	Steering Committee Meeting on Sustainable Development Goals	2022.10.13
16.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் VI	2022.10.18
17.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் VII	2022.10.21
18.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் VIII	2022.10.25
19.	கற்பிட்டி கடல் பகுதியில் சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகள் ஊடாக பவளப் பாறைகளுக்கு ஏற்படும் சேதம் தொடர்பான கலந்துரையாடல்	2022.10.28
20.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் IX	2022.10.31
21.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் X	2022.11.02

#	கூட்டம்	நடாத்தப்பட்ட திகதி
22.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் XI	2022.11.04
23.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் XII	2022.11.08
24.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் XIII	2022.11.10
25.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் XIV	2022.11.11
26.	உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணை தொடர்பான தொழிநுட்ப ஆலோசனைக் குழுக் கூட்டம் 02	2022.11.15
27.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல்/ பிங்கிரிய, அம்பாந்தோட்டை, ஏறாவூர் கைத்தொழில் பேட்டை	2022.11.18
28.	நீர் ஊட்டக்கூறுகள் முகாமைத்துவத்திற்குப் பொருத்தமான முறைமைகளைத் தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல்	2022.11.22
29.	நன்னீர் மீன் வளர்ப்பினை அதிகரிப்பதற்கான மாற்று நடவடிக்கைகளை இனங்காணுதல்	2022.11.30
30.	Progress review meeting on the contribution of the private sector, Government Organization and civil Organization to the Sustainable Development Goals	2022.12.08
31.	மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் - XV	2022.12.21
32.	Meeting between Hon. Prime Minister and ambassador at France	2022.12.22
33.	Meeting between Hon. Prime Minister and Newly appointed SL envoys	2022.12.26

2.4 காலத்தின் தேசிய தேவைப்பாடுகளுக்கான பங்களிப்பு

❖ **உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணை தொடர்பான தொழிநுட்ப ஆலோசனைக் குழு**

உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாவிடின் கடுமையான போசணைக் குறைபாட்டு நிலைமைக்கு இந்நாட்டின் சனத்தொகையில் அதிக சதவீதமானோர் பலியாகலாம் என ஐக்கிய நாடுகள் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த சவாலுக்கான தீர்வுகளாக இணைந்த அணுகுமுறையொன்று ஊடாக அரச, தனியார், அரச சார்பற்ற அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆகிய பிரிவுகளின் செயல்திறமுடைய பங்களிப்புடன் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணையை உறுதிப்படுத்தல் மற்றும் பொருளாதாரப் புத்தெழுச்சி மையங்களை வலுவூட்டுதல் எனும் தலைப்பில் கௌரவ ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு ஏற்ப நிறுவப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணை தொடர்பான பல்துறை இணைந்த பொறிமுறையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணை வேலைத்திட்டங்களின் தொழிநுட்ப மட்டத்திலான ஒருங்கிணைப்பு பிரதம அமைச்சரின் செயலாளர் தலைமை வகிக்கின்ற "உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணை தொடர்பான தொழிநுட்ப ஆலோசனைக் குழு" ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

❖ **அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி**

பல்வேறு வெளிநாட்டு அரசுகள் மற்றும் நிறுவனங்களுடன் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் உள்நாட்டு அபிவிருத்தி மூலோபாயத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்களைச் செய்தல், நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக் குழுக்களை (Think Tank) உருவாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல், வருமான மற்றும் அந்நியச் செலாவணி உருவாக்கல் முன்மொழிவுகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து முக்கியமான இலக்குகள் தொடர்பாக விசேட செயலாற்றுகைக் குழுக்களை நிறுவுதல் மற்றும் ஒருங்கிணைப்பினைச் செய்தல் ஊடாக இதற்கான தலையீடு மேற்கொள்ளப்படுகிறது.

❖ **சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்**

2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்று தொடர்பாக இலங்கை ஜனநாயகக் குடியரசு மற்றும் சீன அரசுடன் கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டது. அதற்கேற்ப, உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (CSFTA) கீழ் தற்போது ஆறு (06) சுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. எனினும், 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்பு இது வரை இரு நாடுகளுக்குமிடையில் கலந்துரையாடல் சுற்றுக்கள் நடாத்தப்படவில்லை.

சீனாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் இணக்கப்பாடுகளைத் துரிதமாக ஆரம்பிக்க முடியுமான வகையில் அமைப/22/0576/402/003 ஆம் இலக்க, 2022.04.25 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறிந்த கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் குழுவின் பிரதான கலந்துரையாடல் மேற்கொள்பவராக பிரதம அமைச்சரின் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளமையினால், சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான ஒருங்கிணைப்பு அலுவல்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் மூலம் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்குக் காணப்படும் வெளிநாட்டுச் சந்தையை விரிவுபடுத்தும் ஆற்றல் மற்றும் இந்நாட்டின் சர்வதே வர்த்தகத்துடன் தொடர்பான மேலும் பல

நேர்மறையான இலக்குகளை இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு அடைந்து கொள்ளும் வாய்ப்புக் காணப்படுகிறது.

- **தொடர்ச்சியாக எரிவாயு வழங்கலைப் பேணிச் செல்வது தொடர்பாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு**

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு நெருக்கடிக்குத் தீர்வாக 2022.09.22 ஆந் திகதிய, 22/1483/604/042/TBR ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், தொடர்ச்சியாக எரிவாயு வழங்கலைப் பேணிச் செல்வது தொடர்பாக கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் ஐந்து (05) பேரை உள்ளடக்கிய அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

- **உணவுப் பாதுகாப்பு துரித தேசிய நடவடிக்கை**

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையில் உள்ளீடுகளின் பற்றாக்குறை காரணமாக எமது உணவு உற்பத்திச் செயன்முறை எதிர்நோக்கியுள்ள சவால்களின் மத்தியில் இந்நாட்டு மக்கள் போசாக்கான உணவுகளைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். அதற்கேற்ப, பிள்ளைகள், பெண்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார் மீது விசேடமாகத் தாக்கம் செலுத்தியுள்ள புரதத் தேவையினைப் பூர்த்தி செய்வதிலுள்ள சவாலுக்குத் தீர்வாக இணைந்த அணுகுமுறையொன்று ஊடாக ஒழுங்கமைக்கப்படும் 18 மாத துரித தேசிய நடவடிக்கையை வெற்றியடையச் செய்வதற்காக கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் “உணவுப் பாதுகாப்பு தேசிய நடவடிக்கைக் குழு – கடற்றொழில் மற்றும் கால்நடை வளங்கள் தேசிய குழு” நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தல் மற்றும் ஏற்புடைய தொடராய்வு அலுவல்களைச் செய்தல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ **பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல்**

(Restrategizing and Acceleration of Mega Projects – RAMP)

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு நிறைவடையும்போது நிரல் அமைச்சுக்கள் ஊடாக 260 பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன், அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை, எரிபொருள், உள்ளீட்டுப் பொருட்களின் இறக்குமதி தாமதமடைதல் மற்றும் கட்டுநிதி வரையறைகள் காரணமாக அந்தக் கருத்திட்டங்களில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றத்தை அடைவது சிக்கலானதாக மாறியுள்ளது.

எனவே, இந்த சிக்கல்களுக்குத் துரிதமான தீர்வுகளை வழங்க முடியுமான அதிகாரங்களைக் கொண்ட அதிகாரிகள் குழுவொன்றை பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் நியமிப்பதற்கும், ஒதுக்கீடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உள்நாட்டு நிதிகள் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களின் செயற்பாடுகளைத் தகுந்த முறையில் நிறைவு செய்வதற்கு மற்றும் மீள ஆரம்பிக்க முன்பு அவற்றின் சாத்தியவளம் மற்றும் தேவைப்பாட்டினை மீளாய்வு செய்து நிதியை வழங்குவதற்கு மீண்டும் முன்னுரிமை அளிப்பதற்குத் தீர்மானிப்பதற்கும், ஏலவே தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள பணியாட்தொகுதி தொடர்பாகவும், சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகள், சொத்துக்கள் மற்றும் கருத்திட்ட வளங்களை

அனுமதியின்றி ஆட்கள் கையகப்படுத்துவைத் நிறுத்துவது சம்பந்தமாகவும் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு இதில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

❖ **அரச பொது மாதிரிப் படிவங்கள் மீளாய்வுக் குழு**

அரசாங்க அச்சகத் திணைக்களத்தினால் அச்சிடப்படுகின்ற பொது மாதிரிப் படிவங்களை மீளாய்வு செய்து அவற்றின் தரம் மற்றும் வடிவத்தினை நவீனமயப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்கான ஒருங்கிணைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

2.5 திட்டமிடல் மற்றும் அறிக்கையிடல்

❖ **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல்**

2022 ஆம் ஆண்டிற்கான ஏற்புடைய செயல்திட்டம் உரிய திகதியில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஆண்டின் சகல காலாண்டுகளுக்குமான செயல்திட்டங்கள் காலாண்டுரீதியாகத் தயாரிக்கப்பட்டு உரிய காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDG's) அடைந்துகொள்வதன் செயற்திறன் அறிக்கையைத் தயாரித்தல**

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின் (SDG) பிரகாரம் சகல நிறுவனங்களும் ஒவ்வொரு ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதன் முன்னேற்றத்தை சமர்ப்பிக்க வேண்டும். அதற்கேற்ப 2021 ஆம் ஆண்டிற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன் அறிக்கை உரியவாறு தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ **வருடாந்த செயற்திறன் அறிக்கை வரைவு மற்றும் இறுதி செயற்திறன் அறிக்கையைத் தயாரித்தல்**

2002.09.12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 2.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2021 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செயற்திறன் அறிக்கையின் வரைவு கணக்காய்வாளர் நாயகத்திற்கும், செயற்திறன் அறிக்கை பாராளுமன்றத்திற்கும் உரியவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ **வருடாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்**

ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் மேற்கொண்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் உள்ளடங்கிய 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த முன்னேற்ற

அறிக்கை மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது சபையில் முன்வைப்பதற்காக உரிய திகதிக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **வருடாந்த செயல்திட்டத்தின் அடிப்படையில் வருடத்தின் சகல காலாண்டுகளுக்குமான முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக ஒவ்வொரு பிரிவினாலும் செய்யப்படுகின்ற செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அளவிடுவது முக்கியமானதாகும். எனவே, பிரதம அமைச்சர் அலுவலகத்தில் காலாண்டுரீதியாக ஒவ்வொரு பிரிவினாலும் செய்யப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அளவிடும் நோக்கத்துடன், 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய சகல காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு உரிய திகதிக்கு முன்பு கணக்காய்வுப் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.6 பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள்

- **அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/ அமைச்சரவைக் குறிப்புக்கள் சம்பந்தமான அலுவல்கள்**

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/ குறிப்புக்களை வரைவு செய்து அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பது வரையான செயன்முறையை நிறைவேற்றுதல் மற்றும் ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளுதல் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கேற்ப 2022 ஜனவரி 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரை பல்வேறுபட்ட விடயத் துறைகளுக்கு ஏற்புடையவாறு 41 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், 19 அமைச்சரவைக் குறிப்புக்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ அமைச்சரவைப் பத்திரங்களின் சாராம்சக் குறிப்புக்களைத் தயாரித்தல்

அமைச்சரவைக் கூட்ட அமர்வுகள் இடம்பெறுவதற்கு முன்பு அமைச்சரவை அலுவலகத்தினால் வாராந்தம் கௌரவ பிரதம அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பதற்காக அனுப்பி வைக்கப்படுகின்ற சகல அமைச்சரவைப் பத்திரங்களிலும் உள்ளடங்கியுள்ள விடயங்களை சாராம்சப்படுத்தி கோப்பொன்றைத் தயாரித்து பிரதம அமைச்சருக்கு மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதற்கேற்ப 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரை 43 அமைச்சரவைப் பத்திர சாராம்சங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

❖ அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமான தரவு அமைப்பினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்

சகல அமைச்சுக்களினாலும் தமது விடயப் பரப்புக்கு ஏற்புடைய பணிகள் சம்பந்தமாக அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/ குறிப்புக்கள், அவற்றுக்கு ஏற்புடைய அவதானிப்புக்கள் மற்றும் தீர்மானங்களையும் ஸ்கேன் செய்து (scan) தரவு அமைப்பினுள் உட்படுத்தி இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் ஏற்புடைய அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்றன. அதற்கேற்ப 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரை முன்வைக்கப்பட்டுள்ள சகல அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/ குறிப்புக்கள், அவற்றுக்கு ஏற்புடைய அவதானிப்புக்கள் மற்றம் தீர்மானங்கள் தரவு அமைப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

❖ பிரேரணை அங்கீகாரங்களைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

கௌரவ ஜனாதிபதி அவர்களினால் வர்த்தமானி ஊடாகப் பிரகடனப்படுத்தப்படுகின்ற சட்டரீதியான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள சட்ட வரைவுகள் சம்பந்தமாகவும், கௌரவ பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரேரணைகள் சம்பந்தமான பிரேரணை அங்கீகாரங்களைத் தயாரித்து பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பது இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கேற்ப 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரை 13 பிரேரணை அங்கீகாரங்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ பாராளுமன்ற வினாக்களுக்குப் பதிலளித்தல்

கௌரவ ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதம அமைச்சரின் விடயப்பரப்புக்கு ஏற்புடையவாறு எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களினால் 2022.01.01 முதல் 2022.12.31 வரை கௌரவ பிரதம அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட்ட என்பத்தி ஆறு (86) வாய்மூல வினாக்களுக்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன. அதற்கேற்ப,

- கௌரவ ஜனாதிபதி அவர்களின் விடயப் பரப்பின் கீழ் வருகின்ற அமைச்சுக்கள் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்துடன் தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமான வாய் மூலமான வினாக்கள் - 52
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் விடயப் பரப்பின் கீழ் வருகின்ற அமைச்சுக்கள் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்துடன் தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமான வாய் மூலமான வினாக்கள் - 34
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றக் கூட்டம் இடம்பெறும் முதலாவது புதன் கிழமை பிரதம அமைச்சரிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பின் கீழ் வினவப்படுகின்ற நான்கு (04) வாய்மூலமான வினாக்களுக்குப் பதில்கள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய இந்த காலப்பகுதியினுள் எட்டு (08) வாய்மூலமான வினாக்களுக்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.
- நான்கு (04) சபை ஒத்திவைப்புப் பிரேரணைகளுக்கு பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன .
- நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் வினவப்பட்ட ஐந்து (05) வினாக்களுக்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

❖ பாராளுமன்ற அறிக்கைகளைச் சபையில் சமர்ப்பித்தல்

கௌரவ ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பான அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், விசேடமாக ஆண்டறிக்கைகள், செயற்திறன் அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள் என்பவற்றைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், இது வரைக்கும் கீழுள்ள விடயங்களின் கீழ் பதினேழு (17) அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கைகள் பின்வருமாறு.

- **பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக முன்வைக்கப்பட்ட செயற்திறன் அறிக்கைகள்**
  - இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு - 2020
  - நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாயம் - 2020
  - நிதி ஆணைக்குழு - 2021
  - அரசாங்க சேவைகள் ஆணைக்குழு - 2021
  - ஆட்பதிவுத் திணைக்களம் - 2021
  - தொழிநுட்ப அமைச்சு - 2021
  - இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு - 2021
  - தேர்தல்கள் ஆணைக்குழு - 2021
  - எல்லை நிர்ணய ஆணைக்குழு - 2021
  - ஜனாதிபதி அலுவலகம் - 2021
  - உயர் நீதிமன்ற நீதிபதிகள் - 2020 - 2021
  - நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாயம் - 2021

- **பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக முன்வைக்கப்பட்ட வருடாந்த அறிக்கைகள்**
  - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு -2016-2019
  - இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவராண்மை -2016- 2018

- **நிலையியற் கட்டளை 119(4)**
  - தேர்தல்கள் ஆணைக்குழு

- **ஏனையவை**
    - தேர்தல்கள் ஆணைக்குழு - 2020 ஆம் ஆண்டிற்கு முன்பு நடாத்தப்பட்ட தேர்தல்கள்/வாக்கெடுப்புக்களுக்கு ஏற்புடைய அறிக்கைகள்
    - தேர்தல்கள் ஆணைக்குழு - 2020 ஆம் ஆண்டின் தேர்தல்கள் அறிக்கை

2.7 சட்ட அலுவல்கள்

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் விடயப் பரப்பின் கீழ் வரும் பல்வேறுபட்ட சட்டரீதியான பணிகளுக்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்கள் மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற ஏனைய அமைச்சுக்களுக்கு ஏற்புடைய சட்டரீதியான அலுவல்கள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றும் ஏனைய நீதிமன்றங்களில் கௌரவ பிரதம அமைச்சரை மற்றும்/ அல்லது பிரதம அமைச்சரின் செயலாளரைப் பிரதிவாதியாக்கி தொடரப்பட்டுள்ள வழக்கு அலுவல்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய ஏற்புடைய தரப்பினருடன் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் சட்டப் பிரிவுக்கு கிடைத்துள்ள வழக்குத் தொடர்தல்களுக்கு ஏற்புடைய அழைப்பாணைகளின் எண்ணிக்கை பின்வருமாறு .
    - உயர்நீதிமன்ற வழக்குக் கோப்புகள் - 24
    - மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குக் கோப்புகள் - 19

- சகல வழக்குக் கோப்புகள் சம்பந்தமான பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், ஏற்புடைய பதிலிப் பத்திரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் தேவையான சந்தர்ப்பங்களில் கௌரவ சட்டமா அதிபருக்கு அவதானிப்புக்கள் மற்றும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் பங்குபற்றுகின்ற சட்ட அலுவல்களுக்கு ஏற்புடைய கூட்டங்கள், விசேட சந்திப்புக்கள் போன்றன சம்பந்தமான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமாக தேவையானவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் குத்தகைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிட வளாகங்களின் குத்தகை ஒப்பந்த வரைவுகள் மற்றும் ஏனைய ஒப்பந்த வரைவுகளைப் பகுப்பாய்வு செய்து விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- சட்டப் பிரிவுக்கு முன்வைக்கப்பட்ட பொது முறைப்பாடுகளை சமர்ப்பிக்கின்ற நபர்களுக்கு அவர்களின் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு சட்ட ஆலோசனைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஏற்புடைய நிறுவனங்களுக்கு குறித்த முறைப்பாடுகளை அனுப்பி ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

- சட்டப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு கோப்புக்களை அவதானித்து அவற்றுக்கு ஏற்புடைய குறிப்புக்கள் மற்றும் விதந்துரைகளை ஏற்புடைய பிரிவுகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பின்வரும் சட்ட வரைவுகளைத் திருத்துதல் மற்றும் சட்ட வரைவுகளைத் தயாரித்தல் சம்பந்தமாக சட்ட மா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம் மற்றும் ஏற்புடைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

  I. இறைச்சிக் கடைக்காரர் சட்டம் மற்றும் விலங்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கான வரைவு
  II. 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம்
  III. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்கு ஏற்புடைய திருத்தங்கள் (மாகாண சபைகள் சட்டம், மாநகர சபைகள் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டம் உட்பட)

2.8 தாபன மற்றும் பணியாட்தொகுதி அலுவல்கள்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை உயர் தரத்துடன் பேணிச் செல்வதற்கு அவசியமான மனித வளத்தினை வினைத்திறன் மிக்கதாகவும், பயனுறுதி வாய்ந்த முறையிலும் பயன்படுத்துவதற்குத் தேவையான நிர்வாக அலுவல்கள், நடவடிக்கை முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பினை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். அதற்காகப் பின்வரும் பணிகள் மற்றும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

❖ **குறைந்தபட்ச பணியாட்தொகுதியொன்றைப் பேணிச் செல்லுதல்**

தற்காலத்தில் நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமையினைக் கருத்திற்கொண்டு கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி குறைந்தபட்ச பணியாட்தொகுதியை மாத்திரம் பேணிச் செல்வது தொடர்பாக கவனத்தை ஈர்த்து, காணப்பட்ட நிறுவனக் கட்டமைப்பினைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் பிரத்தியேக/ தற்காலிகப் பணியாட்தொகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் அத்தியாவசிய பதவிகளுக்கு மாத்திரமே ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

❖ **சேவையின் தரம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குச் சொந்தமான வளங்களை வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்கதாகப் பயன்படுத்தல், உள்ளக மற்றும் வெளியக சேவைபெறுநர்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குதல் ஆகிய நோக்கங்களை முன்னிறுத்தி அலுவலகத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. அலுவலக உத்தியோகத்தர்களுக்கு உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் தொடர்பான அடிப்படை சான்றிதழ் பாடநெறியொன்றை 03 குழுக்களாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் முதலாவது குழு பாடநெறியை சிறப்பாக கற்று நிறைவு செய்ததுடன், எஞ்சிய 02 குழுக்களுக்கும் பாடநெறிகள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டுப் பரீட்சையின் பெறுபேறுகள் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும். அதற்கேற்ப பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒட்டுமொத்த பணியாட்தொகுதிக்கும் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் தொடர்பாக

கோட்பாட்டுரீதியான மற்றும் நடைமுறைரீதியான அறிவை வழங்குவதன் மூலம் கூட்டு அணுகுமுறையொன்று ஊடாக எதிர்வரும் ஆண்டில் உற்பத்தித்திறன் விருதுப் போட்டியில் பங்குபற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

- **தனியாள் கோப்பு சரிபார்ப்புப் பட்டியலைத் தயாரித்தல்**

தனியாள் கோப்புக்களில் அடங்கியுள்ள ஆவணங்களுக்கான சரிபார்ப்புப் பட்டியலொன்று தற்போது தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் தனியாள் கோப்புக்களில் உள்ளடங்க வேண்டிய ஆவணங்களில் நிலவும் குறைபாடுகளை இலகுவாக இனங்காண முடிவதுடன், முழுமையான தகவல்கள் உள்ளடங்கிய தனியாள் கோப்பு மூலம் உத்தியோகத்தரின் சம்பள ஏற்றம் மற்றும் பதவியுயர்வுகளை வழங்குதல், ஓய்வு பெறச் செய்தல் நடவடிக்கைகள் போன்ற பணிகளின்போது தேவையான தகவல்களை வினைத்திறன்மிக்க முறையில் கண்டறியவும், தாமதமின்றி ஏற்புடைய பணிகளை நிறைவேற்றவும் முடியுமாக உள்ளது.

- **அக்ரஹார காப்புறுதிப் பயனாளிகளின் தரவு அமைப்பினை இற்றைப்படுத்தல்**

அரச உத்தியோகத்தர்களின் சுகாதார நிலைமையினை மேம்படுத்துவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியத்தினால் தமது பயன்களை வழங்கும் அலுவல்களை மிகவும் வினைத்திறன்மிக்கதாக, ஒழுங்காகப் பேணிச் செல்லும் நோக்குடன் செயற்படுத்தப்பட்டுள்ள தரவு அமைப்பினை இற்றைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்ப, பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அக்ரஹார காப்புறுதி உரித்தான 237 அங்கத்தவர்களின் தகவல்களை நிகழ்நிலை முறைக்கு அமைவாக இற்றைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **போக்குவரத்து அலுவல்களை ஒழுங்குமுறைப்படி, வினைத்திறன்மிக்கதாகப் பேணிச் செல்லுதல்**

போக்குவரத்துப் பிரிவின் இடவசதிகள் வரையறுக்கப்பட்டதாக இருந்தமையினால், சிறப்பான சேவைச் சூழலொன்றுக்காக சிறிமதீபாய வளாகத்தில் உள்ள சேவைக் கட்டிடத்திற்கு போக்குவரத்துப் பிரிவு கொண்டு செல்லப்பட்டது. பணியாட்தொகுதி மற்றும் சாரதிகளின் அறிவினை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை காப்புறுதி நிறுவனத்துடன் இணைந்து பாதுகாப்பாக வீதியில் வாகனம் செலுத்துதல் மற்றும்

காப்புறுதிப் பயன்களைப் பெற்றுக்கொள்வதில் பின்பற்ற வேண்டிய முறைமை தொடர்பான பயிற்சியொன்று சாரதிகளுக்கு வழங்கப்பட்டது.

2.9 டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல்

நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக அரச செலவினத்தைக் கட்டுப்படுத்தி, மிகவும் நவீன சேவையொன்றை வழங்குவதற்காக டிஜிட்டல் அரச சேவையொன்றை உருவாக்கும் நோக்கத்தினை முன்னிறுத்தி பிரதம அமைச்சர் அலுவலகம் தனது அலுவல்களை மேற்கொள்கிறது. அதற்கேற்ப, பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அலுவல்களைத் தடையின்றி நடாத்திச் செல்வதற்காக உள்ளகரீதியாகத் தயாரிக்கப்பட்ட மென்பொருள் அமைப்புக்கள் நிதமும் மேம்படுத்தப்படுவதுடன். அரச செலவினத்தைக் குறைப்பதற்காக புதிய தகவல் தொழிநுட்பப் பாவனைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றன. மேலும் வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்குவதனை உறுதிப்படுத்தும் வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நிதமும் இற்றைப்படுத்தப்படுவதுடன், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி அலுவலகப் பணிகளை இலகுபடுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன.

- **ஆவண முகாமைத்துவ அமைப்பினை அறிமுகப்படுத்தல்**

அலுவலகத்தின் கடிதப் பரிமாற்றங்கள் மற்றும் அஞ்சல் பிரிவின் அலுவல்களை ஆவண முகாமைத்துவ அமைப்பு (Document Management System) ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அச்சிடல் செலவினங்களைக் குறைப்பதற்காக வரைவுகளை (Draft) மென் பிரதிகளாக DMS ஊடாக அனுப்புதல், பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்கள் கிடைத்தமை பற்றி அறிவிப்பதற்காக குறுஞ் செய்திச் சேவைப் (SMS) பாவனை போன்ற தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பாவனைகள் சிறந்த முறையில் அறிமுகப்படுத்தப்பட்டன.

- **ஆவணக் காப்பகத்திற்கு கோப்பு முகாமைத்துவ அமைப்பொன்றை நிறுவுதல்**

உள்ளக சேவை பெறுநர்களுக்கு வினைத்திறன்மிக்க, பயனுறுதிவாய்ந்த சேவையினை வழங்குவதற்காக உசாத்துணை நட்பான

முறைமையொன்றைஉருவாக்கும் நோக்கத்தினை முன்னிறுத்தி வருடாந்தம் ஆவணக் காப்பகத்திற்குப் பல்வேறு பிரிவுகள் ஊடாக வழங்கப்படுகின்ற கோப்புக்கள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி, மீண்டும் துரிதமாக தேவையான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளமையினால், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவின் பங்களிப்புடன் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஆவணக் காப்பகத்திற்கு கோப்பு முகாமைத்துவ அமைப்பொன்று உருவாக்கப்பட்டது. மேலும், அந்த முறைமை ஊடாக கோப்புக்கள் வைக்கப்பட்டுள்ள இடத்தினை வினைத்திறன்மிக்கதாக, சரியாக இனங்காண்பதற்கான வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

❖ Whatsapp மென்பொருள் பாவனை

- கடதாசி இல்லாத அலுவலக முறைமையொன்றை நிறுவுவதற்கான ஆரம்ப அடிப்படையாக இருப்பு வாகனங்களை ஒதுக்குவதற்காக இது வரை காணப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கைக்குப் பதிலாக WhatsApp ஊடாக படிவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கேற்ப, போக்குவரத்து சேவைத் தேவைப்பாடு தொடர்பாக அறிவிப்பதற்காக குறுஞ் செய்திச் சேவையினைப் (SMS) பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பணியாட்தொகுதியின் லீவினை அனுமதிக்கும் அலுவல்களை WhatsApp படிவமொன்று ஊடாக மேற்கொள்வது பற்றி ஆராயப்படுவதுடன், அதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த அலுவலகத்திலும் அதனைச் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

❖ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அனர்த்த முகாமைத்துவத் தளமொன்றைத் (Disaster Recovery Site) தாபித்தல்

நவீன சைபர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள முடியுமான வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் சகல தரவு அமைப்புக்களுக்கும் சைபர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை நிதமும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன. நவீன சைபர் பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் பிரதம

அமைச்சர் அலுவலகத்திற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அனர்த்த முகாமைத்துவத் தளமொன்றைத் (Disaster Recovery Site) தாபிப்பதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.10 கணக்காய்வு, முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல்

பிரதம அமைச்சரின் செயலாளரினால் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்படுகின்ற கணக்காய்வு அறிக்கைகளை வழங்குதல், பிரதான உள்ளக கணக்காய்வாளரின் காலாண்டுரீதியான மதிப்பீட்டு அறிக்கைகளை தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புதல் மற்றும் அந்த நிறுவனங்களின் வழிகாட்டலுக்கு அமைவாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல் என்பன உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

	கூட்டம்/ நிறைவேற்றிய பணி	திகதி	தலைமை	பெறுபேறு
1	முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப முதலாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்	2022.03.09	பிரதம அமைச்சரின் செயலாளர்	முதலாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் கூட்ட அறிக்கைகளை ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல்
2	முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப இரண்டாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்	2022.09.02	பிரதம அமைச்சரின் செயலாளர்	இரண்டாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் கூட்ட அறிக்கைகளை ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல்

	கூட்டம்/ நிறைவேற்றிய பணி	திகதி	தலைமை	பெறுபேறு
3	முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப மூன்றாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்	2022.11.03	பிரதம அமைச்சரின் செயலாளர்	மூன்றாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் கூட்ட அறிக்கைகளை ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல்
4	முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப நான்காவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்	2022.12.20	பிரதம அமைச்சரின் செயலாளர்	நான்காவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் கூட்ட அறிக்கைகளை ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல்
5	பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் மதிப்பீட்டு அறிக்கையினை காலாண்டுரீதியாக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் • 2021 நான்காவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கை • 2022 முதலாவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கை • 2022 இரண்டாவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கை • 2022 மூன்றாவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கை	2022.01.11 2022.04.27 2022.07.25 2022.10.31		

	கூட்டம்/ நிறைவேற்றிய பணி	திகதி	தலைமை	பெறுபேறு
6	2009.06.09 ஆந் திகதிய, DMA/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கு ஏற்ப காலாண்டுரீதியான அறிக்கைகளை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல்.	2022.02.25 2022.04.29 2022.08.10 2022.10.27		
7	தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு காலாண்டுரீதியாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தல் (படிவம் 6) • முதலாவது காலாண்டு • இரண்டாவது காலாண்டு • மூன்றாவது காலாண்டு	2022.03.14 2022.09.29 2022.11.10		
8	உள்ளகக் கணக்காய்வு அலுவல்களை மேற்கொள்ளுதல் மற்றும் கணக்காய்வு அவதானிப்புக்கள் சிபார்சுகளுடன் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு அறிக்கையிடுதல்.	2022.03.02 2022.04.29 2022.05.18 2022.06.17 2022.06.20 2022.07.06 2022.07.28 2022.08.29 2022.08.30 2022.10.13 2022.10.15 2022.10.18 2022.11.18 2022.12.05		அந்தக் கணக்காய்வு அவதானிப்புக்கள் சிபார்சுகளுடன் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

	கூட்டம்/ நிறைவேற்றிய பணி	திகதி	தலைமை	பெறுபேறு
9	பிரதம அமைச்சரின் செயலாளரினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின்படி விசேட கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்	2022.03.02 2022.05.04 2022.06.20 2022.08.12		அந்தக் கணக்காய்வு அவதானிப்புக்கள் சிபார்சுகளுடன் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.11 இராஜதந்திர மற்றும் சர்வதேச அலுவல்கள்

கௌரவ பிரதம அமைச்சரின் இராஜதந்திர மற்றும் கன்சியுலர் அலுவல்கள் ஒருங்கிணைப்பு மற்றும் பல்வேறு சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குதல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரை வெளிநாட்டுப் பிரமுகர்களின் இலங்கை விஜயம், இராஜதந்திர சந்திப்புக்கள்

#	மாதம்	வெளிநாட்டுப் பிரமுகர்களின் இலங்கை விஜயம்	இராஜதந்திர சந்திப்புக்களின் எண்ணிக்கை
1	ஜனவரி	04	03
2	பெப்ரவரி	02	08
3	மார்ச்	05	02
4	ஏப்ரல்	00	00
5	மே	34	13
6	ஜூன்		
7	ஜூலை		
8	ஆகஸ்ட்	05	06
9	செப்டம்பர்	07	6
10	ஒக்டோபர்	03	02
11	நவம்பர்	10	07
12	டிசம்பர்	04	08

❖ **கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய சர்வதேச செயற்பாடுகள்**

- உலக குடியிருப்பு தின தேசிய நிகழ்வினை அலரி மாளிகையில் நடாத்துதல்
- உள்ளூராட்சி மற்றும் தலைமைத்துவம் தொடர்பான முதலாவது சர்வதேச மாநாட்டின் பிரதான உரை (ICLGL 2022)
- உலக உணவு தினத்தின் பிரதான உரை, ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் கமத்தொழில் அமைப்பு (FAO), கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP)
- ஜப்பான் மற்றும் இலங்கைக்கிடையிலான இராஜதந்திரத் தொடர்புகளுக்கு 70 ஆண்டுகள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நினைவு முத்திரையொன்றை வெளியிடுதல்.
- வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவ நிறுவனத்தின் (ISMM) 50 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் ஆற்றிய உரை
- பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திரப் பயிற்சி நிறுவனத்தின் 24 (BIDTI) ஆவது பட்டமளிப்பு விழாவின் பிரதான உரை
- உலகளாவிய நீர் பங்குடைமை – தெற்காசியாவின் (GWP SAS) 28 ஆவது பிரதேச சபைகள் கூட்டத்தில் நீர்கொழும்பில் ஆற்றிய உரை
- இலங்கையின் KOICA அங்கத்தவர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் ஆற்றிய உரை

- ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்த சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் ஆற்றிய உரை.
- பொதுநலவாய செஸ் விருது நிகழ்வு மற்றும் பரிசளிப்பு விழாவினை இலங்கையில் நடாத்துதல்
- மஹர்சி அரவிந்த் மன்றம் மற்றும் இனரீதியான விஞ்ஞான மன்றம் ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த உலக நல்லிணக்கத்திற்காக சமாதானத்தை ஏற்படுத்துவோரின் சர்வதேச அமைப்பில் ஆற்றிய உரை.
- முன்னாள சீன ஜனாதிபதி ஜியெங் செமின் அவர்களின் மறைவு சம்பந்தமாக அனுதாபத்தைத் தெரிவித்ததுடன், சீன தூதரகத்தில் அனுதாபம் தெரிவிக்கும் ஏட்டில் கையொப்பமிடுதல்.
- இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பக்லே அவர்களுடன் இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காக சீதாவக்க தாவரவியல் பூங்காவில் மரமொன்றை நடுதல்.
- இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பக்லே அவர்களுடன் இலங்கை தொழிநுட்பப் பிரிவு (SLTC) ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் (SLTC) மற்றும் மதுரையின் இந்திய தொழிநுட்ப (IITM) நிறுவனத்துடன் கல்வி, ஆராய்ச்சி உள்ளடங்கிய பங்குடைமைக்காக பங்குடைமைத் தொடர்பொன்றை நிறுவுதல் மற்றும் வளப் பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்குபற்றுதல்.



2.12 பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்

கௌரவ பிரதம அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகளை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் முகாமைத்துவப்படுத்துவது பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. அதன் கீழ் பின்வரும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகளைத் துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு அலுவல்களைச் செய்தல்
- பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பான முன்னேற்றத்தைக் கண்டறிதல்
- பொதுமக்களின் யாப்புரீதியான உரிமைகளை வலுப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- பொதுசனத் தொடர்புகள் பிரிவுக்குக் கிடைக்கின்ற தகவல்கள் மற்றும் முன்மொழிவுகளை கொள்கைகளை வகுக்கும் நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல்
- பொதுமக்களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரச நிறுவனங்களுடன் பலமான ஒருங்கிணைப்பினைக் கட்டியெழுப்புதல்
- தரவு முகாமைத்துவ அமைப்பு ஊடாக பொதுசனத் தொடர்புகள் பிரிவுக்கு கிடைக்கின்ற கோரிக்கைகளை மிகவும் வினைத்திறன்மிக்கதாகவும், துரிதமாகவும் ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல் மற்றும் அந்தப் பணியை உரியவாறு முகாமைத்துவம் செய்து, கண்காணித்தல் மற்றும் ஏற்புடைய தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அறிக்கைகள் தயாரித்தல்

❖ **2022 ஜனவரி 01 ஆந் திகதி முதல் 2022 டிசம்பர் 31 ஆந் திகதி வரை பொதுமக்கள் கோரிக்கைகள், முறைப்பாடுகள் கிடைத்த முறை**

கௌரவ பிரதம அமைச்சருக்குப் பதிவு அஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட பொதுமக்களின் பிரச்சினைகள், மனக்குறைகள் மற்றும் கோரிக்கைகளின் எண்ணிக்கை	9,713
சாதாரண அஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட பொதுமக்களின் பிரச்சினைகள், மனக்குறைகள் மற்றும் கோரிக்கைகளின் எண்ணிக்கை	7,405
சமூகமளித்து கையளிக்கப்பட்ட பொதுமக்களின் பிரச்சினைகள், மனக்குறைகள் மற்றும் கோரிக்கைகளின் எண்ணிக்கை	2,526
மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட பொதுமக்களின் பிரச்சினைகள், மனக்குறைகள் மற்றும் கோரிக்கைகளின் எண்ணிக்கை	1,168
பெக்ஸ் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட பொதுமக்களின் பிரச்சினைகள், மனக்குறைகள் மற்றும் கோரிக்கைகளின் எண்ணிக்கை	435
பதில் கடிதங்கள்	4,451



❖ **2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

- பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகளை மிகவும் வினைத்திறன்மிக்கதாக, துரிதமாக ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், அந்தப் பணியை முறையாக முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புச் செய்வதற்கும் தரவு முகாமைத்துவ அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

- கௌரவ பிரதம அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற பொதுமக்களின் மனக்குறைகள் மற்றும் முறைப்பாடுகள் பொதுசனத் தொடர்புகள் பிரிவுக்கு கிடைக்கும்போது, அது கிடைக்கப்பெற்றதாக அலுவலக குறிப்பிலக்கத்துடன் குறுஞ் செய்தியொன்று ஊடாக மனக்குறை அல்லது முறைப்பாட்டினை சமர்ப்பித்த நபருக்குத் தொடர்பாடல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்காக சகல அமைச்சுக்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் பதவிநிலை மட்டத்திலான ஒருங்கிணைப்பு அதிகாரியொருவரை நியமித்து பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்க்கும் பொறிமுறையொன்றை ஆரம்பித்தல்.

- சகல கடிதங்களையும் ஸ்கேன் செய்தல், எதிர்கால சட்டரீதியான மற்றும் ஏனைய தேவைகளுக்காக மென் பிரதிகளாக களஞ்சியப்படுத்தி வைத்தல்.

- பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள் சம்பந்தமாக இறுதித் தீர்வினைப் பெற்றுக்கொள்வது வரையிலான தொடராய்வுச் செயன்முறையை வினைத்திறனாக்குதல்.

2.13 ஊடகம் மற்றும் தொடர்பாடல்

கௌரவ பிரதம அமைச்சர், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சரின் கீழுள்ள அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி மற்றும் சமூகப் பணிகள் தொடர்பாக அறியப்படுத்துவதற்காக ஒழுங்கான, முறையான, வலுவான ஊடகப் பாவனையொன்று அவசியமாகும் என்பதுடன், அவற்றுக்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளப்பட்ட கடந்தகால, தற்கால செயற்பணிகளை எதிர்காலத்திற்காகப் பாதுகாத்து வைப்பதும் அவசியமான பணியாகும்.

2022 ஆம் ஆண்டில் ஊடகம் மற்றும் தொடர்பாடல் விடயத் துறைக்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளப்பட்ட அலுவல்கள்

- தேசிய நிகழ்வுகள், மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் விசேட சந்தர்ப்பங்களை ஏற்பாடு செய்தல், ஊடக ஒருங்கிணைப்பு, ஊடக அறிக்கையிடல், அவற்றுக்கு ஏற்புடைய செய்திகள், விசேட செய்திகள், கட்டுரைகள், செய்தி அறிவித்தல்கள், அறிக்கை நிகழ்ச்சிகள், புகைப்படங்கள் மற்றும் காணொளிக் காட்சிகளைத் தொலைக்காட்சி அலைவரிசைகள், வானொலி அலைவரிசைகள், பத்திரிகைகள், வெளிநாட்டு ஊடகங்கள், புதிய ஊடகங்கள் மற்றும் பிரதம அமைச்சர் அலுவுலகத்தின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்காக வழங்குதல் மற்றும் தொடராய்வுகளைச் செய்தல்.

- ஊடக நிறுவனங்களுக்குத் தேவையான மேலதிக மூலாதாரங்கள் மற்றும் தகவல்களை வழங்குதல்.

- கௌரவ பிரதம அமைச்சரின் தலையீட்டுடன் நாடு முழுவதும் செயற்படுத்தப்படுகின்ற தேசிய உணவுப் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமியப் பொருளாதாரப் புத்தெழுச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவசியமான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் ஊடக ஒருங்கிணைப்பு

- கௌரவ பிரதம அமைச்சரின் பாராளுமன்ற அலுவல்களுக்கான ஊடக ஒருங்கிணைப்பினைச் செய்தல்

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் பங்குபற்றுகின்ற கூட்டங்கள் மற்றும் பல்வேறு வைபவங்களுக்காக சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் விரிவுரைகள் மற்றும் உரைகளுக்கான விடயங்களைத் தயாரித்தல்

- ஏனைய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சம்பந்தமாக தகவல்களைச் சேகரித்தல்

- பிரதம அமைச்சர் அலுவலகம் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற பொருளாதார, சமூக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமாக ஊடகங்கள் மூலம் மக்களுக்கு அறிவுறுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்

- ஏனைய தேசிய மற்றும் சமூகரீதியான முக்கியத்துவம் மிக்க விடயங்கள் சம்பந்தமாக ஆய்வுகளைச் செய்தல் மற்றும் அது பற்றி கௌரவ பிரதம அமைச்சருக்கு அறிவித்தல்.

- அரச மற்றும் தனியார் நிறுவனங்களினால் அலரி மாளிகை வளாகத்தினுள் நடாத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் வைபவங்களை ஏற்பாடு செய்வதற்கு அவசியமான ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குதல்

- செய்திகள், புகைப்படங்கள் மற்றும் காணொளிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- போயா தின தர்மப் பிரசங்க நிகழ்ச்சி மற்றும் பல்வேறு சமய நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்

- கௌரவ பிரதம அமைச்சரின் சார்பில் சமய, சமூக மற்றும் கலாசார விடயங்கள் சம்பந்தமான வாழ்த்துச் செய்திகள், அனுதாபச் செய்திகளை வெளியிடுதல்.

- நினைவிதழ்கள் மற்றும் விசேட நினைவு தினங்களுக்காக கௌரவ பிரதம அமைச்சரின் விசேட செய்திகளை வெளியிடுதல்.

- சமய விடயம் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்ட சமூக மற்றும் கலாசாரரீதியான கோரிக்கைகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

❖ **ஊடக மற்றும் தொடர்பாடல் செயன்முறை**



2.14 சமய அலுவல்களுக்கான பங்களிப்பு

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற சமய நிகழ்ச்சிகள் மற்றும் சமய வைபவங்கள் தொடர்பாகவும், சமய அலுவல்கள் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாகவும், சமய விடயம் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் வழங்கப்படுகின்ற வாழ்த்துச் செய்திகள் மற்றும் அனுதாபச் செய்திகள் தொடர்பாகவும், அலரி மாளிகை வளாகத்தினுள் பல்வேறு வைபவங்களுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் பங்களிப்புச் செய்தல் தொடர்பாகவும் உள்ள அலுவல்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ **தர்மதீபனீ போயா தின தர்மப் பிரசங் நிகழ்ச்சி**

அறிவுஞானம் மிகுந்த சிறந்த சமூகமொன்றை உருவாக்குவதற்காக புத்த மதத்தின் போதனைகளைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்தை முன்னிறுத்தி போயா தின தர்மப் பிரசங்க புண்ணிய நிகழ்வினை 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் ஒவ்வொரு மாதமும் போயா தினத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தர்மதீபனீ போயா தின தர்மப் பிரசங்க நிகழ்ச்சித் தொடர் தற்போதைய பிரதம அமைச்சர் கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டலுக்கு ஏற்ப நடாத்தப்பட்டது.

❖ **சமய அலுவல்கள் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான அலுவல்களைச் செய்தல்**

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற சமய நிகழ்ச்சிகள் மற்றும் சமய வைபவங்கள் சம்பந்தமாகவும் சமய அலுவல்கள் சம்பந்தமாகவும் சங்கைக்குரிய தேரர்களினாலும், ஏனைய சமயத் தலைவர்களினாலும், பல்வேறுபட்ட தரப்பினராலும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு நாளாந்தம் அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தமான ஒருங்கிணைப்பு மற்றும் தொடராய்வு அலுவல்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ **விசேட சமய, ஏனைய சமூக மற்றும் கலாசார நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்**

கௌரவ பிரதம அமைச்சரின் பங்கேற்புடன், அவரது தலைமையில் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற விசேட சமய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் அவற்றுகான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன. அதற்கேற்ப கொழும்பு கங்காராமை விகாரையின் 43 ஆவது நவம் மகா பெரஹரா 2022 பெப்ரவரி 15 - 16 ஆந் திகதிகளில் வீதி வலம் வருவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் 2022 ஆம் ஆண்டு வெசாக் போயா தினத்தை முன்னிட்டு மே மாதம் 15 - 17 ஆகிய திகதிகளில், பொசான் மாதம் 14 - 16 ஆகிய தினங்களில் கங்காராமை விகாரை சார்ந்த அன்னதானத்திற்கான வசதிகளை வழங்குதல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களினால் அலரி மாளிகை வளாகத்தினுள் நடாத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் வைபவங்களை ஏற்பாடு செய்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டினுள் அவ்வாறான 08 வைபவங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ **ஆசிச் செய்திகள் மற்றும் அனுதாபச் செய்திகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல்**

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அரச தலைவர்கள் வருகை தரும்போது மற்றும் தேசிய தினங்கள் சார்ந்து நடாத்தப்படுகின்ற பல்வேறு பைவங்களை மையப்படுத்தி ஆசிச் செய்திகள், நினைவிதழ்கள் வெளியிடப்படும் சந்தர்ப்பங்களில், அதற்கு கௌரவ பிரதம அமைச்சரின் ஆசிச் செய்தியொன்று வழங்கப்படுவதுடன், சங்கைக்குரிய தேரர்கள் தொடர்பான நாயக்க பதவி அக்தபத்திரங்கள் வழங்குதல், விகாரைகளின் ஆண்டுப் பூர்த்தி நிகழ்வுகள் போன்ற விசேட சந்தர்ப்பங்களை மையப்படுத்தி கௌரவ பிரதம அமைச்சருக்கு முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு ஏற்ப ஆசிச் செய்திகள் வழங்குதல் மற்றும் இதற்கு மேலதிகமாக தேசிய மற்றும் சாசனப் பணியில் ஈடுபட்டுள்ள தேரர்கள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மற்றும் விசேட தினங்களை முன்னிட்டு ஆசிச் செய்திகள் வழங்குதல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வசிக்கின்ற சங்கைக்குரிய மகாநாயக்க, அநுநாயக்க தேரர்கள், விகாராதிபதிகள் மற்றும் ஏனைய தேரர்களின் மறைவின்போது அதற்கு கௌரவ பிரதம அமைச்சரின் அனுதாபத்தைத் தெரிவிப்பதற்காக அவரின் கையொப்பத்துடன் அனுதாபச் செய்திகள் வழங்கப்படுகின்றன. 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரை சமய விடயத்திற்கு ஏற்புடையவாறு 58 வாழ்த்து மற்றும் அனுதாபச் செய்திகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ **சங்கதன மன்றம்**

பிரதம அமைச்சரின் எண்ணக்கருவுக்கு ஏற்ப ஆரம்பிக்கப்பட்ட சங்கதன மன்றம் ஊடாக வரலாற்று மற்றும் காலத்தின் சிற்சில தலைப்புக்கள் சார்ந்து சமூகத்தினுள் உரையாடலொன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுகிறது. அந்தந்தத் துறைகளில் துறைதேர்ந்தோர், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களைத் தொடர்புபடுத்தியவாறு நடாத்தப்படும் இந்த சங்கதன மன்றம் ஊடாக தர்க்கரீதியான அறிவினைக் கொண்ட எதிர்கால சந்ததியொன்றை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதன் முதலாவது நிகழ்வு 2023 ஜனவரி மாதம் நடாத்தப்படவுள்ளது.

ஒப்பம்/அனுர திஸாநாயக்க **பிரதம அமைச்சரின் செயலாளர்** (நிறுவனப் பொறுப்பு)	**ஒப்பம்/ அன்டன் பெரேரா** மேலதிக செயலாளர் (அபிவிருத்தி I) (கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல்)	**ஒப்பம்/ ஏ.ரீ. ஏக்கநாயக்க** பணிப்பாளர் (திட்டமிடல்) (தயாரிப்பு மற்றும் தொகுப்பு)

3.0 ஆண்டின் ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன்

3.1 நிதிச் செயற்திறன் கூற்று

ஏசீஏ- எப்

பிரதம அமைச்சர் அலுவலகம்
2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,073,760,000	1,609,800,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		27,497,161	9,528,160	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		39,393,852	22,307,813	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**பெறுகைகள் (ஆ)**		1,140,651,013	1,641,635,973	
-	**வருமானம் அல்லாத பெறுகைகளும் இ**		1,140,651,013	1,641,635,973	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	-	
	வருமானம் அல்லாத கிடைப்பனவு உ ஈ		1,140,651,013	1,641,635,973	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
394,485,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	340,306,482	443,471,743	
812,365,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	739,432,671	796,361,272	ஏசீஏ-2(ii)
2,600,000	மாற்றல்கள்	7	2,393,789	2,311,965	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
1,209,450,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (உ)**		1,082,132,942	1,242,144,980	
	மூலதனம் செலவினம்				
209,500,000	மேம்படுத்தலும்	10	206,335,279	334,623,707	
23,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	21,653,314	84,028,905	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
800,000	திறன் விருத்தி	14	325,518	923,732	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
233,300,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		228,314,111	419,576,344	
	வைப்புக் கொடுப்பனவுகள்		5,111,030	35,666,688	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		31,179,937	30,715,005	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		36,290,966	66,381,693	
	மொத்த செலவினம் ஐ ஈ (ஊஎஏ)		1,346,738,020	1,728,103,017	
1,442,750,000	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ ஈ (உ-ஐ)**		(206,087,006)	(86,467,044)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(206,087,006)	(86,467,044)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3
			(206,087,006)	(86,467,044)	

1

3.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

ஏசீஏ -பீ

பிரதம அமைச்சர் அலுவலகம்
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	20,084,385,017	19,983,883,399
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	51,419,565	59,633,480
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**20,135,804,582**	**20,043,516,880**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		23,344,160	53,944,207
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		20,084,385,017	19,983,883,399
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ- 5(பீ)		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	28,075,405	5,689,274
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**20,135,804,582**	**20,043,516,880**

பக்க இலக்கம் 7 முதல் 24 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 25 முதல் 31 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காண்ப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 22/02/2023

Anura Dissanayake
Secretary to the Prime Minister
Prime Minister's Office
No. 58, Sir Ernest de Silva Mw,
Colombo 07.

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 28/02/2023

Y M S Gunasekara
Chief Financial Officer
Prime Minister's Office
58, Sir Ernest De Silva Mawatha
Colombo 07

பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி : 28/02/2023

M.M.J.R.N. Fernando
Chief Accountant
Prime Minister's Office
No. 58, Sir Ernest De Silva Mawa
Colombo 07

2

3.3 நிதிப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

பிரதம அமைச்சர் அலுவலகம்
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022	2021
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	211,952,564	41,317,445
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,073,760,000	1,609,800,000
முற்பணங்களை அறவிடல்	19,654,772	27,486,819
வைப்புக்களின் பெறுகை	27,497,161	9,528,160
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**1,332,864,497**	**1,688,132,424**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	1,066,512,509	1,195,481,432
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	2,393,789	2,311,965
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	3,955,567	5,689,345
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	-
முற்பணக் கொடுப்பனவு	26,577,492	29,406,652
வைப்புக் கொடுப்பனவு	5,111,030	35,666,688
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**1,104,550,386**	**1,268,556,081**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**228,314,111**	**419,576,344**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	228,314,111	419,576,344
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**228,314,111**	**419,576,344**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(228,314,111)**	**(419,576,344)**
(எ)=(இ)+(ஊ)	**(0)**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**-**	**-**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**-**	**-**
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**-**	**-**
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**-**	**-**

3

4.0 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்திற்கு ஏற்ப)

பிரதான துறை	செயற்பாடு	குறிகாட்டி	உண்மையான விளைவளவு சதவீதமாக (%)		
			100% - 90%	89% - 75%	74% - 50%
தேசிய கொள்கைகளை வகுத்தல், அவற்றைச் செயற்படுத்தல், தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்	பல்வேறு அரச நிறுவனங்கள்/ அரசியல்வாதிகளினால் கௌரவ பிரதம அமைச்சருக்கு முன்வைக்கப்பட்ட விசேட கோரிக்கைகளுக்கு ஏற்புடைய அலுவல்களை ஒருங்கிணைத்தல்	தலையிட்டு மேற்கொள்ளப்பட்ட விசேட கோரிக்கைகளின் எண்ணிக்கை	✓		
	கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவைக் குறிப்புகள் மற்றும் விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல், அவற்றை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல், அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தல், பாராளுமன்ற வினாக்களுக்குப் பதில் வழங்குதல்	சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்புகள் மற்றும் விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை முன்வைக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் பதில் வழங்கப்பட்ட பாராளுமன்ற வினாக்களின் எண்ணிக்கை	✓		
	கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் நடாத்தப்படுகின்ற கூட்டங்கள்/ விசேட நிகழ்வுகள், சந்தர்ப்பங்களுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு, வசதிகளை வழங்குதல்	நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை/ அனுப்பி வைக்கப்பட்ட வரைவுகளின் எண்ணிக்கை	✓		

பிரதான துறை	செயற்பாடு	குறிகாட்டி	உண்மையான விளைவளவு சதவீதமாக (%)		
			100%-90%	89% - 75%	74% - 50%
தேசிய கொள்கைகளை வகுத்தல், அவற்றைச் செயற்படுத்தல், தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்	கௌரவ பிரதம அமைச்சரின்/ பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களைத் தொடராய்வு செய்தல்	தொடராய்வு செய்யப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை	✓		
	அமைச்சுக்கள்/ பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கிடையிலான அபிவிருத்திப் பணிகளுக்கு வசதிகளை வழங்குதல்	நிறைவேற்றப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	✓		
	காலத்திற்குக் காலம் ஏற்படும் தேசிய தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு, அதற்கேற்ப அறிக்கைகளைத் தயாரித்தல்	இனங்காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை	✓		
	பொதுமக்களின் மனக்குறைகள் சம்பந்தமாக செயலாற்றும்போது இனங்காணப்பட்ட தேசிய கொள்கைகளில் நிலவும் நடைமுறைச் சிக்கல்களை சரிசெய்தல்	சரிசெய்யப்பட்ட சிக்கல்களின் எண்ணிக்கை		✓	
சமய அலுவல்கள், சமூக நலனோம்புகை	தேசிய / சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணைச் சேவைகளுக்கு ஏற்புடைய அலுவல்கள் ஒருங்கிணைப்பு	ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட தேசிய / சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணைச் சேவைகளின் எண்ணிக்கை	✓		

பிரதான துறை	செயற்பாடு	குறிகாட்டி	உண்மையான விளைவளவு சதவீதமாக (%)		
			100% - 90%	89% - 75%	74% - 50%
சமய அலுவல்கள், சமூக நலனோம்புகை	மாதாந்த போயா தின தர்மப் பிரசங்க நிகழ்ச்சிகளை நடாத்துதல்	நடாத்தப்பட்ட போயா தின தர்மப் பிரசங்க நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	✓		
	சமய அலுவல்கள் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் நடாத்தப்படும் கலந்துரையாடல்களை ஒருங்கிணைத்தல்	நிறைவேற்றப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	✓		
	சமய விடயம் சம்பந்தமாக ஆசிச் செய்திகளை வழங்குவது சம்பந்தமான அலுவல்கள்	தயாரிக்கப்பட்ட ஆசிச் செய்திகளின் எண்ணிக்கை	✓		
	சமய விடயம் சம்பந்தமாக அனுதாபச் செய்திகளை வழங்குவது சம்பந்தமான அலுவல்கள்	தயாரிக்கப்பட்ட அனுதாபச் செய்திகளின் எண்ணிக்கை	✓		
சமய அலுவல்கள், சமூக நலனோம்புகை	விசேட சமய நிகழ்ச்சிகள், வைபவங்களை ஏற்பாடு செய்தல்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	✓		
	சுகாதாரம், கல்வி, கழிவு முகாமைத்துவம், சமூக நலனோம்புகை, சுற்றாடல், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அரச நிர்வாகம் போன்ற விடயங்களுக்கு ஏற்புடையவாறு பொதுமக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளை இனங்காணுதல்	அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை மற்றும் கோரிக்கைகளின் எண்ணிக்கை		✓	
	பொதுச் சிக்கல்கள் மற்றும் மனக்குறைகளைத் தீர்ப்பதற்காக ஏற்புடைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு	அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை/ பதிலளித்த கடிதங்களின் எண்ணிக்கை	✓		

பிரதான துறை	செயற்பாடு	குறிகாட்டி	உண்மையான விளைவளவு சதவீதமாக (%)		
			100%-90%	89% - 75%	74% - 50%
	அரச சேவையின் தரம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக நிரல் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்குப் புதிய முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்	அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை/ பதிலளித்த கடிதங்களின் எண்ணிக்கை	✓		
சர்வதேச ஒத்துழைப்பு	வெளிநாட்டுத் தூதுரகங்கள், வெளிநாட்டுத் தூதுவர் சேவை அதிகாரிகளுடன் தொடர்புகளை மேம்படுத்துவதற்குத் தேவையான அலுவல்களை ஒருங்கிணைத்தல்	நிறைவேற்றப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	✓		
	சர்வதேச மாநாடுகளில் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் பங்கேற்புக்கு ஏற்புடைய அலுவல்களை ஒருங்கிணைத்தல்	நிறைவேற்றப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	✓		
சட்டரீதியான அலுவல்கள்	சட்ட வரைவுகள் திருத்தம், மீளாய்வு மற்றும் தேவையான விதந்துரைகளைச் சமர்ப்பித்தல்	சட்ட வரைவுகள் திருத்தம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வுகள், விதந்துரை அறிக்கைகளின் எண்ணிக்கை	✓		
	நீதிமன்ற வழக்குகளுக்கு ஏற்புடையவாறு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பினைச் செய்தல்	சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	✓		

பிரதான துறை	செயற்பாடு	குறிகாட்டி	உண்மையான விளைவளவு சதவீதமாக (%)		
			100%-90%	89% - 75%	74% - 50%
சட்டரீதியான அலுவல்கள்	சட்டம் மற்றும் நீதிமன்றச் செயன்முறை தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக நிகழ்நிலை முறையில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் மாவட்ட மட்டத்தில் கருத்தரங்குத் தொடரொன்றை ஏற்பாடு செய்தல்	நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளின் எண்ணிக்கை			✓
	சட்டம் மற்றும் நீதிமன்றச் செயன்முறை தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை			✓
	சட்டச் சஞ்சிகை 2022, தொகுதி I, II, III, IV ஐ பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் வெளியிடுதல்	உரிய திகதியில் சஞ்சிகையை வெளியிடுதல்			✓
பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் மற்றும் பிரச்சாரம்	அரச / தேசிய வைபவங்கள் மற்றும் விசேட சந்தர்ப்பங்களுக்கு ஊடக அறிக்கையிடலை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு	ஊடக அறிக்கையிடப்பட்ட அரச / தேசிய மற்றும் விசேட சந்தர்ப்பங்களின் /வைபவங்கள் எண்ணிக்கை	✓		
முறையான மற்றும் சிறந்த தாபனச் செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயாரித்தல்	2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கை உரிய திகதியில் சமர்ப்பித்தல்	✓		

பிரதான துறை	செயற்பாடு	குறிகாட்டி	உண்மையான விளைவளவு சதவீதமாக (%)		
			100%-90%	89% - 75%	74% - 50%
முறையான மற்றும் சிறந்த தாபனச் செயற்பாடுகள்	2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு மதிப்பீட்டினைத் தயாரித்து திறைசேறிக்குச் சமர்ப்பித்தல்	2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு மதிப்பீட்டினை உரிய திகதியில் சமர்ப்பித்தல்	✓		
	கணக்காய்வு அலுவலகம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளரிடமிருந்து கிடைத்த கணக்காய்வு விசாரணைகளுக்குப் பதில்களை வழங்குதல்	பதில் வழங்கிய கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை	✓		
	2021 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்	2021 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை உரிய திகதியில் சமர்ப்பித்தல்	✓		
	2021 ஆம் ஆண்டின் செயற்திறன் அறிக்கையைத் தயாரித்தல்	2020 ஆம் ஆண்டின் செயற்திறன் அறிக்கையை உரிய தினத்தில் சமர்ப்பித்தல்	✓		
	2022 ஆம் ஆண்டுக்கான காலாண்டுரீதியான, வருடாந்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்	2022 ஆம் ஆண்டுக்கான காலாண்டுரீதியான, வருடாந்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கையை உரிய திகதியில் சமர்ப்பித்தல்	✓		
	2023 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டத்தைத் தயாரித்தல்	2023 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டத்தை உரிய திகதியில் சமர்ப்பித்தல்	✓		
	பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளைத் துரிதமாக, ஒழுங்குமுறைப்படி பெற்றுக்கொள்வதற்காக இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்	தரவு முகாமைத்துவ அமைப்புக்கு உள்ளடக்கப்பட்ட கடிதங்கள்/ அறிக்கைகளின் எண்ணிக்கை அதனூடாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை ஆலோசனைகளின் எண்ணிக்கை	✓		

பிரதான துறை	செயற்பாடு	குறிகாட்டி	உண்மையான விளைவளவு சதவீதமாக (%)		
			100%-90%	89% - 75%	74% - 50%
	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்	நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை		✓	
முறையான மற்றும் சிறந்த தாபனச் செயற்பாடுகள	உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைத் தயாரித்தல்	தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை	✓		
	2023 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்	2023 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை உரிய திகதியில் சமர்ப்பித்தல்	✓		
கொள்திறன் அபிவிருத்தி	அதிகாரிகளின் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல்	நிறைவுசெய்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை/ கலந்துகொண்ட அதிகாரிகளின் எண்ணிக்கை	✓		
	உற்பத்தித்திறனை மேம்படுத்தல் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்)	நிறைவேற்றப்பட்ட பணிகளின் எண்ணிக்கை		✓	
டிஜிட்டல்மயப்படுத்தல்	இணையத்தளத்துடன் தொடர்புடைய தரவு முகாமைத்துவ அமைப்பினை மேம்படுத்துவதற்காக புதிய உள்ளீடுகளை வழங்குதல்	நிறைவேற்றப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	✓		
	அலுவலக இணையத்தளத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்	இற்றைப்படுத்தப்பட்ட அலுவலக இணையத்தளம்	✓		

பிரதான துறை	செயற்பாடு	குறிகாட்டி	உண்மையான விளைவளவு சதவீதமாக (%)		
			100%-90%	89% - 75%	74% - 50%
	கணனி வலையமைப்புக்கள், மின்னஞ்சல் மற்றும் கணனி உள்ளீடுகளின் சேவைப் பேணுகை	பாவனையாளர்களுக்கு இலகுவான, பாதுகாப்பான சேவையினை வழங்குதல்	✓		
	உள்ளகத் தகவல் அமைப்பின் பேணுகை மற்றும் அபிவிருத்தி	இற்றைப்படுத்தப்பட்ட உள்ளகத் தகவல் அமைப்பு	✓		
நிறுவன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி	அலுவலகத்திற்கு அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பராமரித்தல்	மேற்கொள்ளப்பட்ட பெறுகைப் பணிகளின் எண்ணிக்கை கொள்வனவு செய்யப்பட்ட, பராமரிக்கப்பட்ட இயந்திர சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெறுமதி	✓		
	அலுவலக வசதிகளைப் பராமரித்தல்	பராமரிக்கப்பட்ட அலுவலகச் சூழல் மற்றும் கைச்சாத்திடப்பட்ட சேவை ஒப்பந்தங்களின் எண்ணிக்கை	✓		
	அலுவலகத்திற்கு அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கொள்வனவு செய்தல்	மேற்கொள்ளப்பட்ட பெறுகைப் பணிகளின் எண்ணிக்கை கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களின் எண்ணிக்கை	✓		

பிரதான துறை	செயற்பாடு	குறிகாட்டி	உண்மையான விளைவளவு சதவீதமாக (%)		
			100%-90%	89% - 75%	74% - 50%
நிறுவன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி	அலுவலகத்திற்கு இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பராமரித்தல்	மேற்கொள்ளப்பட்ட பெறுகைப் பணிகளின் எண்ணிக்கை கொள்வனவு செய்த, பராமரிக்கப்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெறுமதி	✓		

5.0 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன்

5.1. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன் குறிகாட்டிகள்

#	நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்	இலக்குகள்	குறிகாட்டிகள்	நிறைவேற்றிய செயற்பாடுகளின் எண்ணிக்கை	செயற்பாடுகள்	உண்மையான விளைவளவு		
						0 - 49%	50- 74%	75 - 100%
1	பசியால் வாடுதலை முடிவுறுத்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசாக்கு மட்டத்தை அடைதல், பேண்தகு விவசாயத்தை மேம்படுத்தல் **(2)**	2.1 2.4	- 2.4.1	13	மக்களின் வாழ்க்கைச் செலவினத்தைக் குறைப்பதற்காக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை நிலையான மட்டத்தில் பேணிச் செல்லுதல் மற்றும் ஆண்டு முழுவதும் உணவினைப் பெற்றுக்கொள்வதற்காக உணவினைப் பாதுகாப்பதற்கு உணவு உற்பத்தியாளர்களுக்கு, இறக்குமதியாளர்களுக்கு மற்றும் விற்பனையாளர்களுக்கு அவசியமான வழிகாட்டலை வழங்குதல்.			√
		2.3	2.3.2	02	சிறியளவிலான உணவு உற்பத்தியாளர்களின் (பால் சார்ந்த உற்பத்தியாளர்களின் மற்றும் கடற்றொழில் துறையில்) சந்தைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான வழிகாட்டலை வழங்குதல்.			√
2	ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும், அனைத்து வயதிலும் நல்லிருப்பை உறுதிப்படுத்தல். **(3)**	3.8	3.8.1	01	பொதுமக்களுக்கு அத்தியாவசியமான சுகாதார சேவைகள் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கு (தரமுயர்ந்த, குறைந்த செலவுடைய) தலையீடு செய்தல்			√

#	நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்	இலக்குகள்	குறிகாட்டிகள்	நிறைவேற்றிய செயற்பாடுகளின் எண்ணிக்கை	செயற்பாடுகள்	உண்மையான விளைவளவு		
						0 - 49 %	50- 74%	75 - 100%
3	சமமான, பரம்பலடைந்த கல்வியைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்தலும் அனைவருக்கும் வாழ்நாள் பூராகவும் கல்வியைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அதனை மேம்படுத்தல். **(4)**	4.3	-	01	அனைவருக்கும் தரமான மூன்றாம் நிலைக் கல்வியை வழங்குவதற்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்குத் தலையீடு செய்தல்			√
4	அனைவருக்கும் நீர் கிடைத்தல், பேண்தகு அபிவிருத்தி மற்றும் பொதுச் சுகாதார வசதிகள் கிடைப்பதை உறுதிசெய்தல் **(6)**	6.1 6.3 6.4	6.3.2	01	தரமான நீரினைக் கொண்ட நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் நீரேந்து முகாமைத்துவம் தொடர்பான தேவையான வழிகாட்டலை வழங்குதல்			√
5	அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, நம்பகரமான, பேண்தகு நவீன வலுசக்தி வழங்கலை உறுதிப்படுத்தல் **(7)**	7.1	-	04	வலுசக்தி நெருக்கடியின் மத்தியில் மாற்று வலுசக்திகளைப் பயன்படுத்தல் மற்றும் அத்துறைக்கு அவசியமான கொள்கைரீதியான தலையீடு மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குதல்.			√
		7.ஆ	-	11	வலுசக்தித் துறையினை அபிவிருத்தி செய்வதற்காகப் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை விதந்துரைப்பதற்காக அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.			√

#	நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்	இலக்குகள்	குறிகாட்டிகள்	நிறைவேற்றிய செயற்பாடுகளின் எண்ணிக்கை	செயற்பாடுகள்	உண்மையான விளைவளவு		
						0 - 49 %	50- 74%	75 - 100%
6	உள்ளீர்க்கப்பட்ட பேண்தகு பொருளாதார வளர்ச்சி, பூரண உற்பத்தித்திறனுடைய வேலை வாய்ப்புக்கள் மற்றும் அனைவருக்கும் கௌரவமான தொழில்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல். **(8)**	8.1	-	06	தற்போதைய பொருளாதார நிலைமையினை மறுசீரமைப்பதற்காக பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டமிடலுக்குத் தேவையான வழிகாட்டலை வழங்குதல்.			√
		8.5	8.5.2	02	விசேட தேவையுடைய சமூகத்தினருக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்குதல்.			√
		8.9	-	02	சுற்றுலாக் கைத்தொழில் சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதற்காக அந்தக் கைத்தொழிலில் நிலவும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிகாட்டலை வழங்குதல்.			√
		8.10	-	02	அனைவருக்கும் வங்கி மற்றும் காப்புறுதி வசதிகளை அணுகுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வழிகாட்டல் வழங்குதல்.			√
		8.๔	-	01	சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குதல்.			√
		8.๔๐	-	01	இளம் சமூகத்தினை வெளிநாட்டுத் தொழில்களுக்கு அனுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான வழிகாட்டலை வழங்குதல்.			√

#	நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்	இலக்குகள்	குறிகாட்டிகள்	நிறைவேற்றிய செயற்பாடுகளின் எண்ணிக்கை	செயற்பாடுகள்	உண்மையான விளைவளவு		
						0 - 49 %	50-74%	75 - 100%
7	பலமான உட்கட்டமைப்பு வசதிகள், உள்ளீர்ப்பு, பேண்தகு கைத்தொழில்மயமாக்கல் மேம்பாடு மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களை ஊக்கப்படுத்தல் **(9)**	9.1	-	01	அனைவருக்கும் நிலைபேறான, தரமான, பலமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நோக்குடன், பிரதேச, நகர வீதிகள் மற்றும் அதிவேகப் பாதைகள் அபிவிருத்தி உட்பட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டலை வழங்குதல்			√
		9.3	9.3.2	02	உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தரமான கைத்தொழிலாளர்களை மேம்படுத்துவதற்கு செய்ய வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனை வழங்குதல்.			√
08	நகர மற்றும் மனிதக் குடியிருப்புக்களை உள்ளீர்த்தல், பாதுகாப்பு மற்றும் பேண்தகு தன்மையாக மாற்றுதல் **(11)**	11.3 11.4	-	04	முறையான நகரத் திட்டமிடல்களைச் செயற்படுத்துவது சம்பந்தமாக அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிகாட்டல்.			√
		11.1 11.3	11.1.1 11.3.2	15	ஒழுங்கற்ற குடியிருப்புக்கள் மற்றும் போதியதல்லாத வீட்டு வசதிகளின் கீழ் வாழும் நகர சனத்தொகையினருக்கு நிலைபேறான மானிடக் குடியிருப்புக்களைத் திட்டமிடுவதற்கு ஆலோசனை வழங்குதல்.			√

#	நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்	இலக்குகள்	குறிகாட்டிகள்	நிறைவேற்றிய செயற்பாடுகளின் எண்ணிக்கை	செயற்பாடுகள்	உண்மையான விளைவளவு		
						0 - 49 %	50 - 74%	75 - 100%
09	சமுத்திரம், கடல் மற்றும் சமுத்திர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பேண்தகு அபிவிருத்திக்காகப் பயன்படுத்தல். **(14)**	14.6	14.6.1	01	சட்டவிரோத மற்றும் கட்டுப்படுத்தப்படாத கடற்றொழில் நடவடிக்கைகள் ஊடாக சமுத்திர மற்றும் கரையோரச் சூழல் அமைப்புக்கள் மீது ஏற்படும் தாக்கத்தினைத் தடுப்பதற்காக தேவையான தலையீட்டினைச் செய்தல்.			√
10	பூகோள சூழல் அமைப்புக்களின் நிலைபேறான பாவனை, நிலைபேறான வனாந்தர முகாமைத்துவம், பாலைவனமயமாக்கலுக்கு எதிராக செயற்பட்டுப் பாதுகாத்து ஊக்குவித்தல், காணி பதனழிதலைத் தடுத்தல் மற்றும் மறுசீரமைத்தல், உயிர் பல்வகைத்தன்மை அழிவதைத் தடுத்தல். **(15)**	15.1	15.1.2	01	நிலப்பகுதியில் காணப்படும் நன்னீர் சூழலில் மீன் வளர்ப்பினை மேம்படுத்துவதற்காக மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை வழங்குதல்.			√

#	நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்	இலக்குகள்	குறிகாட்டிகள்	நிறைவேற்றிய செயற்பாடுகளின் எண்ணிக்கை	செயற்பாடுகள்	உண்மையான விளைவளவு		
						0 - 49%	50 - 74%	75 - 100%
11	செயற்படுத்தல் முறைமைகளைப் பலப்படுத்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான உலக ஒத்துழைப்பின் புத்தெழுச்சி. **(17)**	17.5 17.11 17.4	17.5.1 17.11.1 -	02	ஆடைக் கைத்தொழில் மற்றும் வியாபாரத் துறையினை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதியைக் குறிப்பிடத்தக்க மட்டத்தில் அதிகரிப்பதற்கு அவசியமான வழிகாட்டல்.			√
				04	இந்திக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை வழங்குதல்.			√
12	சகல நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்	-	-	02	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கான வழிநடாத்தல் குழுக்களை ஏற்பாடு செய்தல், ஏற்புடைய ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வினைச் செய்தல்.			√

5.2. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை விரிவாக இனங்காணுதல்

இலக்கு	குறிகாட்டி	அறிமுகம்
2.1		2030 ஆம் ஆண்டளவில் பசியை ஒழித்தல் மற்றும் விசேடமாக சிறு பிள்ளைகள் உட்பட வறுமையினால் வாடும் மற்றும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள மக்கள் பாதுகாப்பான, போசனையுள்ள, போதுமான உணவினை ஆண்டு முழுவதும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை உறுதிப்படுத்தல்.
2.3		2030 ஆம் ஆண்டளவில் சிறியளவிலான உணவு உற்பத்தியாளர்களின், விசேடமாக பெண்களின், சுதேச மக்களின், விவசாயக் குடும்பங்கள், மற்றும் மீனவர்களின் கமத்தொழில் உற்பத்தித்திறன் மற்றும் வருமானம், காணிகளுக்குப் பாதுகாப்பாக மற்றும் சம அளவில் அணுகுவதற்கான வாய்ப்புக்கள், ஏனைய உற்பத்தி வளங்கள் மற்றும் கொடைகள், அறிவு, நிதிச் சேவைகள், சந்தை மற்றும் பெறுமதி சேர்த்தல் மற்றும் பண்ணைகள் அல்லாத தொழில்களுக்கான வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக இரண்டு மடங்காக்குதல்.
	2.3.2	ஆண் பெண் பாலினம் மற்றும் சுதேச மட்டத்திற்கு ஏற்ப சிறியளவிலான உணவு உற்பத்தியாளர்களின் சாதாரண வருமானம்
2.4		2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான உணவு உற்பத்தி அமைப்புக்கள் காணப்படுவதை உறுதிப்படுத்தல் மற்றும் உயிரியல் அமைப்புக்கள் காணப்படுவதை உறுதிப்படுத்தல் மற்றும் உயிரியல் அமைப்புக்களைப் பேணிச் செல்வதற்கு உதவுகின்ற, காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப மாறுகின்ற திறன்களைப் பலப்படுத்துகின்ற பாதிப்பான காலநிலை நிலைமைகள், வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்கள் மற்றும் காணிகள் மற்றும் மண்ணின் தரமான நிலைமைகளை விருத்தி செய்கின்ற தாக்குப்பிடிக்க முடியுமான கமத்தொழில் பாவனைகளைச் செயற்படுத்தல்.
	2.4.1	உற்பத்தித்திறனுடைய, நிலைபேறான விவசாயம் செய்யப்படுகின்ற விவசாய நிலத்தின் அளவு
3.8		நிதி ஆபத்துக்கு உட்படுவதிலிருந்து பாதுகாத்தல் உட்பட பாதுகாப்பான, பயனுறுதிவாய்ந்த, உயர் தரத்திலான, குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியுமான மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் அத்தியாவசிய சுகாதார சேவைகளை அனைவருக்கும் பெற்றுக்கொள்ள முடிதல் உட்பட உலக மட்டத்தில் சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடிதல்.

இலக்கு	குறிகாட்டி	அறிமுகம்
	3.8.1	அத்தியாவசிய சுகாதார சேவைகள் காப்பீடு (பொதுமக்கள் மற்றும் மிகவும் வசதிகள் குறைந்த சனத்தொகையினர் மத்தியில் இனப்பெருக்க, தாய், சேய், சிறுவர், சுகாதார, தொற்றும் நோய்கள், தொற்றா நோய்கள் மற்றும் சேவை வசதிகளுக்கான கிடைப்பனவு என அழைக்கப்படும்)
4.3		2030 ஆம் ஆண்டளவில் சகல பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் உயர் தரத்திலான மற்றும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியுமான பல்கலைக்கழகக் கல்வி உட்பட தொழிநுட்ப, தொழில் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
6.1		2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் சமத்துவத்துடன், பாதுகாப்பான மற்றும் குறைந்த விலையில் குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
6.3		2030 ஆம் ஆண்டளவில் நீர் மாசடைதலைக் குறைத்து தரத்தினை அதிகரித்தல், பாதிப்பை ஏற்படுத்துகின்ற நச்சு இரசாயன மற்றும் ஏனைய பொருட்களை அகற்றுதல் மற்றும் வெளியிடலை ஒழித்தல், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வெளியேற்றத்தைக் குறைத்தல் மற்றும் நீரைக் குறைந்த மட்டத்தில் மீள்சுழற்சி செய்து, பாதுகாப்பாகப் பயன்படுத்தல்.
	6.3.2	தரமான நீரினைக் கொண்ட நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை.
6.4		2030 ஆம் ஆண்டளவில் சகல துறைகளிலும் வினைத்திறன்மிக்க முறையில் நீரினைப் பயன்படுத்துவதை குறிப்பிடத்தக்க மட்டத்தில் அதிகரித்தல், நிலைபேறான முறையில் நீரைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வழங்குதல், நீர் தட்டுப்பாட்டினை இல்லாமற் செய்வதற்காக நீர் தட்டுப்பாட்டினால் அவதியுறுகின்ற மக்களின் எண்ணிக்கையை அளவுரீதியாகக் குறைத்தல்.
7.1		2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியுமான நம்பகமான நவீன வலுசக்தி மூலாதாரங்களை அணுக முடிவதை உறுதிப்படுத்தல்.
7.ஆ		2030 ஆம் ஆண்டளவில் விசேடமாக குறைந்தளவில் அபிவிருத்தியடைந்த நாடுகள், சிறிய தீவு நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் எல்லைகளினால் உள்ளடங்கிய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளையும் உள்ளடக்கிய சகல அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கும் அவற்றின் நிகழ்ச்சித்திட்டத் திட்டங்களுக்கு அமைவாக நவீன மற்றும் நிலைபேறான வலுசக்திச் சேவை வழங்கலுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் தொழிநுட்பத்தை மேம்படுத்தல்.

இலக்கு	குறிகாட்டி	அறிமுகம்
8.1		தேசிய நிலைமைகளுக்கு ஏற்ப தனிநபர் பொருளாதார விருத்தியைப் பேணிச் செல்லுதல் மற்றும் விசேடமாக குறைந்தபட்சம் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் வருடமொன்றில் குறைந்தபட்சம் 7% மொத்த தேசிய உற்பத்தி விருத்தியைப் பேணிச் செல்லுதல்.
8.5		2030 ஆம் ஆண்டளவில் அங்கவீனர்கள் மற்றும் யௌவனர்கள் உள்ளடங்கலாக அனைத்துப் பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் உற்பத்தித்திறன்மிக்க, பண்பார்ந்த தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்.
	8.5.2	ஆண், பெண் பாலினம், வயது மற்றும் அங்கவீனர்களுக்கு ஏற்புடையவாறு வேலையின்மை வீதம்.
8.9		2030 ஆம் ஆண்டளவில் உள்நாட்டுக் கலாசாரம், உற்பத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்துக்கின்ற நிலைபேறான சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான கொள்கைகளைத் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்.
8.10 8.அ		அனைவருக்கும் வங்கி வசதிகள், காப்புறுதி மற்றும் நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள அணுக முடியுமான வகையில் உள்நாட்டு நிதி நிறுவனங்களின் திறன்களைப் பலப்படுத்தல். விசேடமாக குறைந்தபட்சம் அபிவிருத்தியடைந்த நாடுகள் உட்பட அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கு வர்த்தகம் சம்பந்தமாக வழங்குகின்ற உதவிகளை அதிகரித்தல், குறைந்தபட்சம் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு வர்த்தகம் சம்பந்தமாக தொழிநுட்ப உதவியை வழங்குவதற்கான இணைந்த வேலைத்திட்டமொன்றுக்கு ஏற்ப செயற்படுதல்.
8.ஆ		இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்காக உலக மட்டத்திலான மூலோபாயங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்தல் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின்
9.1		பொருளாதார அபிவிருத்தி மற்றும் மானிட நல்லிருப்புக்காக அனைவருக்கும் பெற்றுக்கொள்ள முடியுமான தன்மை மற்றும் அணுக முடிவதைக் கருத்திற்கொண்டு பிராந்திய மற்றும் தேசிய எல்லைகளிடையே மேற்கொள்ளப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட தரமான, உயர் நம்பகத்தன்மையுள்ள நிலைபேறான, அனர்த்தங்களுக்குத் தாக்குப் பிடிக்கின்ற உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

இலக்கு	குறிகாட்டி	அறிமுகம்
9.3		விசேடமாக அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் சிறியளவிலான கைத்தொழில்கள் மற்றும் ஏனைய தொழில்முயற்சிகளுக்கான நிதிச் சேவைகள், கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான அணுகல் மற்றும் சந்தர்ப்பங்களை அதிகரித்தல் மற்றும் அந்த தொழில்முயற்சிகளைப் பெறுமதிச் சங்கிலிகள் மற்றும் சந்தைச் சங்கிலிகளுடன் இணைத்தல்.
	9.3.2	கடன் அல்லது கடன் பொறுப்புடைய சிறியளவிலான கைத்தொழில்களின் எண்ணிக்கை.
11.1		2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் போதிய, பாதுகாப்பான, குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியுமான வீடமைப்பு மற்றும் அடிப்படைச் சேவைகளை அணுக முடிவதை உறுதிப்படுத்தல் மற்றும் குடிசை வீடுகளை மேம்படுத்தல்.
	11.1.1	குடிசைகள், முறைசாரா குடியேற்றங்கள் அல்லது போதியதல்லாத வீடமைப்பு வசதிகளின் கீழ் வாழ்கின்ற நகர சனத்தொகையின் அளவு.
11.3		2030 ஆம் ஆண்டளவில் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான நகரமயமாக்கலை மேம்படுத்தல், சகல நாடுகளின் பங்கேற்புடைய, இணைந்த மற்றும் நிலைபேறான குடியிருப்புக்களைத் திட்டமிடுதல்.
	11.3.2	முறையாக மற்றும் ஜனநாயகமான முறையில் செயற்படுத்தப்படுகின்ற நகரத் திட்டங்கள் மற்றும் முகாமைத்துவச் செயற்பாட்டினுள் சிவில் சமூகத்திற்கு நேடியாகப் பங்கேற்க முடியுமான கட்டமைப்பொன்றுடன் கூடிய நகரங்களின் அளவு
11.4	14.6.1	உலகின் இயற்கையான மற்றும் கலாசார மரபுரிமைகளைக் காத்துப் பேணுதல் மற்றும் பாதுகாப்பதற்கான முயற்சிகளைப் பலப்படுத்தல் நாடுகளுக்கு ஏற்ப சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன் பிடித்தலைத் தடுப்பதை இலக்காகக் கொண்ட சர்வதேச மூலோபாயங்களைச் செயற்படுத்துவதன் மட்டம் தொடர்பான முன்னேற்றம்.
15.1		நிலத்தில் மற்றும் கரைநில உட்பகுதியில் காணப்படும் நன்னீர் அமைப்பு மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கின்ற சேவைகள், விசேடமான காடுகள், மலைகள் மற்றும் உலர் நிலங்களை சர்வதேச உடன்படிக்கைகளுக்கு ஏற்ப பாதுகாத்தல், மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் நிலைபேறான பாவனையை உறுதிப்படுத்தல்.

இலக்கு	குறிகாட்டி	அறிமுகம்
	15.1.2	பாதுகாப்பான பிரதேசங்கள் மற்றும் சூழல் அமைப்புக்களின் வடிவங்களுக்கு ஏற்ப பௌதீக மற்றும் நன்னீர் உயிரினப் பல்வகைமைக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் அளவு.
17.5		குறைந்தளவில் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களைப் பயன்படுத்தல் மற்றும் செயற்படுத்தல்.
	17.5.1	குறைவாக அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு முதலீட்டு ஊக்குவிப்புக்களைப் பயன்படுத்தியுள்ள மற்றும் செயற்படுத்துகின்ற நாடுகளின் எண்ணிக்கை.
17.11		குறைந்தபட்சம் அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து உலக ஏற்றுமதிக்கு வழங்கும் பகுதியை இரட்டிப்பாக்கும் நோக்கத்துடன், அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் ஏற்றுமதியைக் குறிப்பிடத்தக்க மட்டத்தில் அதிகரித்தல்.
	17.11.1	உலக ஏற்றுமதிகளில் அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் குறைவாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் பங்கு.
17.4		நிதிக் கடன், கடன் உதவி மற்றும் கடன் மறுசீரமைப்பினை இலக்காகக் கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கைகள் ஊடாக அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கு நீண்ட கால கடன் ஸ்திரத்தன்மைக்காக உதவி வழங்குதல் மற்றும் கடுமையாக கடன்பட்டுள்ள, வறுமையினால் வாடும் நாடுகளுக்கு கடன் அழுத்த நிலைமைகளிலிருந்து மீள்வதற்கான தீர்வுகளை வழங்குதல்.

6.0 மனித வளங்கள் தொடர்பான குறிப்பு

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அனுமதிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை	தற்போது காணப்படும் பதவியணி எண்ணிக்கை	வெற்றிடங்கள் (மேலதிக)
சிரேஷ்ட	62	32	30
மூன்றாம் நிலை	26	16	10
இரண்டாம் நிலை	249	121	128
ஆரம்ப	224	106	118

(2022.12.31 ஆந் திகதி வரை)

6.2 மேலதிக பணியாட்தொகுதி அல்லது பணியாட்தொகுதிப் பற்றாக்குறை நிறுவனத்தின் செயற்திறனில் தாக்கம் செலுத்தும் விதம்

2022.12.31 ஆந் திகதியில் சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப எனும் சகல மட்டங்களிலும் சேவைப் பிரிவுகளில் ஊழியர் பற்றாக்குறை காணப்பட்டது.

